மாலை: 51 மணி: 12 டிசம்பர் 2009 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு





ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்
# திருவல்லிக்கேணி, சென்னை-5.

## வைகுண்டஏகாதசி பெருவிழா

ஐந்து திவ்யதேசத்து எம்பெருமான்கள் (ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீரங்கநாதர், ஸ்ரீகஜேந்திரவரதர், ஸ்ரீநரசிம்மர், ஸ்ரீராமர்). எழுந்தருளி அருள்பாலிக்கும், அற்புதத் திருத்தலம். ஸ்ரீ யோக நரசிம்மர் மேற்கு நோக்கி நோய் தீர்க்கும் பெருமாளாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். ஸ்ரீவராஹர் மற்றும் ஸ்ரீநரசிம்மருடன் அருள்மிகு ரங்கநாதர் எழுந்தருளியுள்ளது இத்திருத்தல சிறப்பம்சமாகும். இத்திருக்குளக்கரையில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் வேண்டியவர்களுக்கு வேண்டியதை அருளும், திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

ஸ்ரீபார்த்தசாரதி சுவாமியின் திருவருளால் ஸ்ரீராமானுஜர் அவதரிக்கக் காரணமான திருத்தலம்.

இச்சிறப்புகள் வாய்ந்த ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் திருமொழித்திருநாள், திருவாய் மொழித் திருநாள் என்கிற பகல்பத்து இராப்பத்து திருவிழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| பகல்பத்து உற்சவம் | 18.12.2009 முதல் 27.12.2009 முடிய |
| வைகுண்ட ஏகாதசி | 28.12.2009<br>அதிகாலை 4.30 மணிக்கு<br>சொர்க்கவாசல் திறப்பு. |
| இராப்பத்து உற்சவம் | 28.12.2009 - 06.01.2010 வரை<br>நடைபெறுகிறது.<br>29.12.2009 முதல் 05.01.2010 வரை<br>மாலை 6.00 மணிக்கும், 6.01.2010<br>அன்று காலை 10.00 மணிக்கும்<br>சொர்க்கவாசல் திறக்கப்படும். |

பக்தப் பெருமக்கள் அனைவரும் இப்பெருவிழாவில் கலந்து கொண்டு, ஸ்ரீ ருக்மணி சமேத ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமியின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

**பொ.ஜெயராமன்**

*துணை ஆணையர்/செயல் அலுவலர்/ தக்கார்.*

E-mail: parthasarathyswamytemple@gmail.com
web: www.sriparthasarathyswamytemple.org

*அலுவலகம்: **28442462**. தகவல் நிலையம். **28442449**, தொலை நகலி: **28447042***



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 மார்கழி மாதம்
மாலை 51. மணி 12 டிசம்பர் 2009

**அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!**
**வணக்கம்.**

மாதங்களில் நான் மார்கழியாகத் திகழ்கிறேன் என கிருஷ்ணபரமாத்மா குறிப்பிடும் சிறப்புமிக்க மார்கழித்திங்களில் வெளியாகும் இவ்விதழ் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாச்சியார் ஆண்டாள் அருட் காட்சியுடன் முன் முகப்பிலும், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதியின் அற்புதத் திருக்கோலத்தினை உள் முகப்பிலும் கொண்டு வெளிவந்துள்ளது.

பதஞ்சலி முனிவருக்கும், வியாக்ரபாத முனிவருக்கும் தில்லைச் சிற்றம்பலத்தான் தன் நடனத்தை ஆடிக் காட்டிய திருவாதிரைத் திருநாள் விழாவும், ஆன்மாக்களின் இலக்கான பரமபதத்தினை அடைய அனைத்து வைணவத் திருத்தலங்களிலும், குறிப்பாக பூலோக வைகுந்தம் எனப் போற்றப்படும் திருவரங்கன் வீற்றிருக்கும் ஸ்ரீரங்கத்திலும் கொண்டாடப்படும் வைகுந்த ஏகாதசிப் பெருவிழா மார்கழித் திங்களில் கொண்டாடப்பட உள்ளது.

தொடுப்பு, முடிப்பு, காப்பு, படைப்பு, அழிப்பு, மறைப்பு, அருள்பு ஆகிய ஏழுவகைச் சூழ்நிலைகளில் இறைவன் திருநடனத்தில் உலகம் உருள்கிறது. இவ்வுண்மையைக் கண்டுகொள்வதே ஆன்மாவின் கடன் என்பதை மணிவாசகர் உணர்த்தவே திருவெம்பாவையை உலகிற்கு அருளினார் என்பதையும், மார்கழியில் கீழ்த்திசையில் கதிரவன் உதிப்பதற்கு முன்பே கிளர்ந்தெழுந்த கன்னிப் பெண்களின் கூட்டம் ஒருவரையொருவர் விழிப்படையச் செய்த விதத்தை அழகான சொற்றொடரிலும், தொகுத்து வழங்கியுள்ளார் தமிழாகரர் தெ முருகசாமி அவர்கள்

வைகுந்த ஏகாதசியின் பல பெருமைகளில் சில துளிகளை மட்டும் வழங்கியுள்ளார் முனைவர் திரு.டி.எஸ்.ராமஸ்வாமி அவர்கள்

பெண்மணிகள் கற்பரசி சாவித்ரியின் சரித்திரத்தை, படித்து நல்லொழுக்கத்தை மேற்கொண்டு பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் வளர்ச்சியடையச்செய்து பொன்றாப் புகழைப் பெறவேண்டும் என அறிவுரை வழங்கிய இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்மிகத் தென்றல் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள். "சாவித்ரி" எனும் தொடர் இவ்விதழில் முடிவுறுகிறது.

மார்கழியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்களின் குறிப்பு அழகிய வண்ணப்படங்களுடன், இவ்விதழில் வெளிவந்துள்ளது.

தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள கண்காணிப்பாளர் திரு. ஸ்ரீதரன் அவர்கள் வழங்கியுள்ள ஊட்டத்தூர் அருள்மிகு சுத்த ரத்தினேசுவரர் திருக்கோயில் சிறப்புகளும், பனையபுரம் அதியமான் அவர்களின் மிளகைப் பயிறாக்கிய திருப்பயத்தங்குடி நாதர் சிறப்புகளும் திருத்தல உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

தர்ம மார்க்கத்தில் இருந்து தவறாத இராமநுஜர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யம் ஒரு போதும் அழியாது நிலைத்த விதத்தை "உலகம் உய்ய உதித்த உடையவர்" தொடரில் வழங்கியுள்ளார். செயல் அலுவலர் திரு.பெ.இராமநாதபிள்ளை அவர்கள். முனைவர் திரு.டி.எஸ். இராமஸ்வாமி அவர்களின் கண்டேன் கமலமலர்ப் பாதம் எனும் தொடரும் இவ்விதழில் தொடர்ந்து வெளிவந்துள்ளது.

காஞ்சி வரதனின் நவராத்திரி விழாப் பெருமைகளையும் சிறப்புகளையும், "தீபப்பிரகாசர்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் இந்திரா ஆராவமுதன் அவர்கள்.

இம்மார்கழித்திங்களில் நாள்தோறும் அதிகாலையில் நீராடி திருக்கோயில்களுக்குச் சென்று இறையருள் பெறவும், திருவாதிரைத் திருநாளில் தில்லைச்சிற்றம்பலத்தானின் திருநடனத்தைக் கண்டும் வைகுந்த ஏகாதசி பெருவிழாவில் கலந்து கொண்டும் வாழ்வில் நற்பயன் பெறுவோமாக என வாசகப்பெருமக்கள் அனைவரையும் வேண்டுகிறேன்.

அனைவரும் திருக்கோயில் இதழினைப் படித்து, தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை வழங்கிட வேண்டுகிறேன்.

ப.ரா.சம்பத்

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்



# குறளோவியம்

நாள் தவறினாலும் தவறும்; நாகன் – நல்லானைச் சந்திப்பது தவறாது; நல்லான் அந்த ஊரில் உள்ள பெருநிலக் கிழார்களில் ஒருவன். கண்ணுக் கெட்டிய தூரம் அவனுக்குக் கழனிகள் உண்டு. ஆற்றுப் பாசனம் – அதுவும் ஆற்றுப்படுகையை ஒட்டிய வளம் பொருந்திய பூமி! முப்போகம் விளையக்கூடிய செழிப்பான நிலம்! அவன் வீட்டுக் களஞ்சியத்தில் மாணிக்க நெல் மணிகள் நிறைந்திராத நேரமே இருந்ததில்லை.

நாகன், அவனுக்கு நண்பன், அவனைத் தன் உயிரினும் மேலாக நேசித்தான் நல்லான். எளிதில் யாரையும் நம்பி, அவர்பால் அளவற்ற அன்பும் நட்பும் கொண்டு அவர்கட்குத் தேவையான உதவிகளைச் செய்வது நல்லானின் இயல்பு!

அவனிடம் மிக நெருங்கிப் பழகிய நாகன், நல்லானின் இதயத்தில் சிறந்ததோர் இடத்தைப் பிடித்திருந்தான். நாகன் தங்கைக்குத் திருமணம். அந்த விழா இனிது நிறைவேற தேவைப்பட்ட பணமும், பொருளும் கொடுத்து நாகனுக்கு நல்லான் உதவினான். கிழமைதோறும் நாகன் வீட்டுக்கு நல்லான் மாளிகையிலிருந்து தும்பைப்பூ போன்ற அரிசி, அவன் வீட்டுத் தேவைக்கேற்ப அனுப்பப்பட்டுக் கொண்டே இருக்கும். குடிசை வீட்டில் வாழ்ந்த நாகனுக்கு அழகிய கல்வீடு ஒன்று கட்டிப் பரிசாக வழங்கியிருந்தான் நல்லான்.

நாகன், நல்லானைச் சந்திக்கும் போதெல்லாம் அவன் செய்யும் உதவிகளுக்கு நன்றி கூறிக் கொண்டேயிருப்பான். நல்லானின் அறிவாற்றல் – செயலாற்றல் – இனிய குணம் – நல்ல பண்பு – நட்புக்கு இலக்கணமாகத் திகழும் தன்மை இவற்றையெல்லாம் நாகன் பாராட்டிக் கொண்டேயிருப்பான். நல்லானுக்கே சலித்துப் போகிற அளவுக்கு நாகன் அவனைப் புகழ்ந்துரைப்பான்.

''போதுமப்பா! போதும்! என் நண்பனுக்குச் செய்ய வேண்டிய கடமையை நான் செய்கிறேன். அதற்குக் கைம்மாறாக நீ என்னைப் பாராட்டத் தேவையே இல்லை. எந்த நிலையிலும் நமது நட்பு அழியாமல் நீடித்தால், அது ஒன்றே எனக்கு மனத்தெம்பினை அளிக்கும். மகிழ்ச்சியைத் தரும்,'' என்று கண்களில் நீர் துளிர்க்க நல்லான் நாகனிடம் கூறுவான்.

திடீரென ஓராண்டு கடும் புயல் – மழை – ஊரெல்லாம் வெள்ளம்! தொடர்ந்து பத்துப் பதினைந்து நாட்கள் பெய்த மழையாலும் – அடித்த புயலாலும் ஆற்றுப் படுகையை ஒட்டிய நல்லானின் கழனிகள் அனைத்தும் மண் மூடிப் போய் விட்டன. அந்த ஊரில் எந்த நிலக்கிழாருக்கும் ஏற்படாத இழப்பு நல்லானுக்கு ஏற்பட்டு விட்டது.

மழையும் புயலும் ஓய்ந்த பிறகு, நல்லான் தன் நிலங்களைக் காணச் சென்றான். மண் மேடுகள்தான் தென்பட்டன. குவிந்து கிடக்கும் மண்ணையும், மணலையும் அகற்றி, அமிழ்ந்து கிடக்கும் வயல்களைச் சீர்படுத்துவதற்கு ஓராண்டுக் காலமாகும். நல்லான்

மனமொடிந்து போனான். எனினும், மீண்டும் அந்த வளமிகு பூமியைச் செம்மைப்படுத்த முடியுமென்று உறுதியாக நம்பினான்.



தன் துயரத்தை நாகனுடன் பங்கிட்டுக் கொள்ளத் துடித்தான். நாலைந்து நாட்களாகவே நாகன், அவன் வீட்டுக்கு வரவில்லை. வெள்ளத்தில் ஏதாவது நாகனுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதோ என்ற கவலையில் அவனை அழைத்து வர நல்லான் ஆளை அனுப்பினான். அனுப்பப்பட்ட ஆளிடம் நாகன் "நாளை வருகிறேன்," என்று சொல்லியனுப்பினான். இதே பதில்தான் நாகனிடமிருந்து ஒவ்வொரு நாளும் வந்து கொண்டிருந்தது. பிறகு நல்லான் கேள்விப்பட்டான்; நாகன் இப்போதெல்லாம் அந்த ஊரின் மற்றொரு நிலக்கிழார் வல்லான் என்பாரின் வீட்டிலேயே இருக்கிறான் என்று!

வல்லானின் நிலங்கள் மேட்டுப்பாங்கான இடத்தில் இருந்ததால் அதிகம் பாதிக்கப் படவில்லை. நல்லானுக்கு ஏற்பட்டது போன்ற பேரிழப்பு ஏற்படவுமில்லை. நாகன், வல்லானைப் புகழவும் வாழ்த்தவும் தன் நாக்கை வளைத்துக் கொள்வது அவனுக்கு எளிதாகவே இருந்தது. நல்லான், தன் நிலம் மண் மேடிட்டது குறித்துக் கவலைப்பட்டதை விட நாகனின் நட்பு எத்தகையது என்பதை எண்ணித்தான் அதிகமாகக் கவலைப்பட்டான்.

"தமக்குப் பயன் உள்ளபோது நட்புக் கொண்டு நெருங்கியிருந்துவிட்டு பயன் இல்லாதபோது நீங்கிவிடுகிறவர்களின் தகுதியற்ற நட்பைப் பெற்றால் என்ன? அல்லது இழந்தால் என்ன?''என்ற குறள் மொழியை நல்லானின் நெஞ்சம் குமுறலாக வெளிப்படுத்தியது.

"உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்."

அதிகாரம்:82 தீ நட்பு பாடல்: 812.

உறின் - பயனுள்ளபோது; அறின் - பயனில்லாதபோது; ஒரூஉம் - நீங்கிடும்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

## இதழின் உள்ளே..


| | | |
|---|---|---|
| 1. பாவைப் பாடலும் பரமன் ஆடலும் | தமிழாகரர் தெ.முருகசாமி | 6 |
| 2. வைகுண்ட ஏகாதசி | முனைவர்.டி.எஸ்.ராமஸ்வாமி | 12 |
| 3. சாவித்திரி | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் | 15 |
| 4. மார்கழியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள் | | 17 |
| 5. ஊட்டத்தூர் அருள்மிகு சுத்தரத்தினேசுவரர் | -கி.ஸ்ரீதரன் | 22 |
| 6. உலகம் உய்ய உதித்த உடையவர் | -பெ.ராமநாதபிள்ளை | 25 |
| 7. ஸேநாபதிகள் | -டாக்டர் இரா. நாகசாமி | 29 |
| 8. கண்டேன் கமலமலர்ப்பாதம் | -முனைவர். டி.எஸ். ராமஸ்வாமி | 31- |
| 9. தீபப்பிரகாசர் | -இந்திரா ஆராவமுதன் | 34 |
| 10. மிளகைப் பயிறாக்கிய திருப்பயத்தங்குடி நாதர் | -பனையபுரம் அதியமான் | 37 |


வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை விழுமிய முனிவர்விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார்களிற்றைக் குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை அமுதை என்னையாளுடையப்பனை ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே.
-திருமங்கையாழ்வார்.
PARTHASARATHI
ஸ்ரீ பலராமர்
SRI BALARAMAR
ஸ்ரீ ருக்மிணி
SRI RUKMINI
ஸ்ரீ வேங்கடக்ருஷ்ணன்
SRI VENKATA KRISHNAN
ஸ்ரீ ஸாத்யகி - ஸ்ரீப்ரத்யும்னன்- ஸ்ரீ அனிருத்தன்
SRI SATYAKI-SRI PRATHYUMNAN-SRI ANIRUDHAN

# அருள்மிகு திருமால் 108 போற்றிகள்

1. ஓம் அச்சுதனே போற்றி
2. ஓம் அண்ணலே போற்றி
3. ஓம் அந்தனே போற்றி
4. ஓம் அப்பனே போற்றி
5. ஓம் அம்மையே போற்றி
6. ஓம் அரங்கனே போற்றி
7. ஓம் அரியே போற்றி
8. ஓம் அரையனே போற்றி
9. ஓம் அழகனே போற்றி
10. ஓம் அற்புதனே போற்றி
11. ஓம் அன்பனே போற்றி
12. ஓம் அனந்தனே போற்றி
13. ஓம் ஆதிமூர்த்தியே போற்றி
14. ஓம் ஆயர்கொழுந்தே போற்றி
15. ஓம் ஆராவமுதே போற்றி
16. ஓம் ஆதியே போற்றி
17. ஓம் ஆழிவண்ணனே போற்றி
18. ஓம் இருடீகேசனே போற்றி
19. ஓம் இறைவனே போற்றி
20. ஓம் இன்பனே போற்றி
21. ஓம் ஈசனே போற்றி
22. ஓம் உடையவனே போற்றி
23. ஓம் உத்தமனே போற்றி
24. ஓம் உயிராளனே போற்றி
25. ஓம் உவப்பிலானே போற்றி
26. ஓம் உற்றாரிலியே போற்றி
27. ஓம் எரியே போற்றி
28. ஓம் எழிலே போற்றி
29. ஓம் ஒண்சுடரே போற்றி
30. ஓம் ஒத்தாரில்லானே போற்றி
31. ஓம் கடல்வண்ணனே போற்றி
32. ஓம் கண்ணனே போற்றி
33. ஓம் கருணையே போற்றி
34. ஓம் கன்னலே போற்றி
35. ஓம் கனியே போற்றி
36. ஓம் காகுத்தனே போற்றி
37. ஓம் காரணனே போற்றி
38. ஓம் குழகனே போற்றி
39. ஓம் கூத்தனே போற்றி
40. ஓம் கேசவனே போற்றி
41. ஓம் கேடிலியே போற்றி
42. ஓம் கோவிந்தனே போற்றி
43. ஓம் கோனே போற்றி
44. ஓம் கௌவுத்துவமார்பனே போற்றி
45. ஓம் சந்தோகனே போற்றி
46. ஓம் சந்திரனே போற்றி
47. ஓம் சாமவேதியனே போற்றி
48. ஓம் சிந்தாமணியே போற்றி
49. ஓம் சிரிதரனே போற்றி
50. ஓம் சேயனே போற்றி
51. ஓம் சேவகனே போற்றி
52. ஓம் ஞானமூர்த்தியே போற்றி
53. ஓம் தமிழோசையனே போற்றி
54. ஓம் தனியனே போற்றி
55. ஓம் தாசரதியே போற்றி
56. ஓம் தாமோதரனே போற்றி
57. ஓம் திரிவிக்கிரமனே போற்றி
58. ஓம் திருக்குறளனே போற்றி
59. ஓம் திருமகள் கேள்வனே போற்றி
60. ஓம் திருமார்பனே போற்றி
61. ஓம் திருவே போற்றி
62. ஓம் தீர்த்தனே போற்றி
63. ஓம் துய்ப்பனே போற்றி
64. ஓம் துழாய்முடியனே போற்றி
65. ஓம் தூதனே போற்றி
66. ஓம் தூபனே போற்றி
67. ஓம் தெய்வநாயகனே போற்றி
68. ஓம் தேவனே போற்றி
69. ஓம் தேனே போற்றி
70. ஓம் தேர்வலவனே போற்றி
71. ஓம் தைத்திரியனே போற்றி
72. ஓம் நரனே போற்றி
73. ஓம் நரசிங்கனே போற்றி
74. ஓம் நம்பனே போற்றி
75. ஓம் நம்பியே போற்றி
76. ஓம் நாதனே போற்றி
77. ஓம் நாரணனே போற்றி
78. ஓம் நிமலனே போற்றி
79. ஓம் நெடியவனே போற்றி
80. ஓம் நேமிப்பிரானே போற்றி
81. ஓம் பங்கயங்கண்ணனே போற்றி
82. ஓம் பச்சைமாமலையே போற்றி
83. ஓம் பரஞ்சுடரே போற்றி
84. ஓம் பாம்பரனே போற்றி
85. ஓம் பரமனே போற்றி
86. ஓம் புவள வாயனே போற்றி
87. ஓம் பத்மநாபனே போற்றி
88. ஓம் பாம்பணையானே போற்றி
89. ஓம் பாவநாசனே போற்றி
90. ஓம் பிறப்பிலியே போற்றி
91. ஓம் பீதக ஆடைப் பிரானே போற்றி
92. ஓம் புருடோத்தமனே போற்றி
93. ஓம் புனிதனே போற்றி
94. ஓம் பூவை வண்ணனே போற்றி
95. ஓம் பைந்தமிழ்ப் பின்சென்றாய் போற்றி
96. ஓம் மணிவண்ணனே போற்றி
97. ஓம் மதுசூதனனே போற்றி
98. ஓம் மருந்தே போற்றி
99. ஓம் மாதவனே போற்றி
100. ஓம் வள்ளலே போற்றி
101. ஓம் வனமாலை மார்பனே போற்றி
102. ஓம் வாசுதேவனே போற்றி
103. ஓம் விட்டுணுவே போற்றி
104. ஓம் விமலனே போற்றி
105. ஓம் வேங்கடவனே போற்றி
106. ஓம் வேதவிளக்கே போற்றி
107. ஓம் வைகுந்தனே போற்றி
108. ஓம் வைத்தமாநிதியே போற்றி

நிறைவாக, அந்தந்த திருத்தலத்திற்குரிய திருமால் பாடலை ஓதி, போற்றியை நிறைவு செய்யலாம்.

# "பாவைப் பாடலும் பரமன் ஆடலும்"

ஆமாம்! அவர்கள் அப்படித்தான் பாடிக்கொண்டே வந்தார்கள். பாடிவந்த அந்தக்கூட்டம், தாருகா வனத்துத் தெருவில் பிட்சாந்தேகி என வீடு வீடாகக் கேட்ட பிட்சாடண னைப்போன்று பிச்சைப் பாத்திரம் ஏந்தியக்கூட்டமா என்ன? இல்லை!... இல்லை!... பக்தியைக் கிளப்பும் பஜனைப் பாடல்கள் பாடிவந்த கிளிக்கூட்டக் கீர்த்தனைப் பெண்கள்தான் அவர்கள்! இன்னும் சரியாகச் சொன்னால், கீழ்த்திசையில் கதிரவன் உதிப்பதற்கு முன்பே கிளர்ந்தெழுந்து விழித்த கன்னிப்பெண்களின் கூட்டந்



தான் அது என்றால் அந்த உண்மையை யார் மறுப்பார்?

அதுசரி! அந்த அளவிற்குக் கூடிய கூட்டம் என்றால் எத்தனைபேர்? நூறா? ஆயிரமா? முதலில் ஒருத்தி, யாரும் எழுப்பாமலே தானே எழுந்தாள், விழிப்படைந்தாள், தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதைக் கற்ற வளாதலினால் தன்னைப்போல் இன்னும் எட்டுபேரை விழிப்படையச் செய்த முகாந் தரத்தைப் பாடும் பாவைப் பாடல்களாக மாணிக்கவாசகரால் பாடப்பட்டவையே திருவெம்பாவைப் பாடல்களாகும்.

ஆம்! உலகம் சக்திமயமானது, அந்தச் சக்தியே உலகத்தின் சாரம். அதுதான் மூலாதாரம் என்றாலும் தகும். படைப்பு, வளர்ப்பு, காப்பு, ஈர்ப்பு இணைப்பு, உயிர்ப்பு, மறைப்பு, அருள்பு, அழிப்பு என்ற ஒன்பதுமின்றி உலகம் ஏது? இந்த ஒன்பதோடும் உருள்வதே உலகம் என்ற தத்துவ விசாரணையை உள்ளடக்கியவாறு ஒன்பது பேரும் ஒருவரை ஒருவர் எழுப்ப, எழுந்து வந்து ஒன்று சேர்கின்றனர்.

கன்னியர் ஒன்பதுபேரும் ஒருவரை ஒருவர் எழுப்பிய விதமே அலாதியானது!

மாதங்களில் நான் மார்கழி எனக்கூறிய கண்ணனின் வைரவரிகளைக் கேள்விப் பட்டிருந்தாலும் அந்தச் சைவசமயக் கன்னியர்கள் தில்லைச் சிற்றம்பலத்தானின் மார்கழித் திருவாதிரை மகத்துவத்தால் பாவை நீராடத்திற்குக் கொட்டும் பனியையும் நடுங்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஒன்று கூட வேண்டி ஒருவரை ஒருவர் எழுப்ப முற்பட்டார்கள்.

அப்பப்பா!... தூங்குபவர்களை எழுப்பியபாடே பெரும்பாடு! யாரும் எழுப்பாமல் தானே எழுந்தவள்தான் முதலாமவள். அவள் அடுத்தவளை எழுப்பும் போது 'உனக்குப் பாட்டென்றால் பிடிக்குமே' எனக்கூறாமல் கூறுபவள் போல "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியைப்" பாடினாள்.

தூங்கியவள் கண்விழித்ததாகவோ தான் பாடியதைக் காதுகொடுத்துக் கேட்டதாகவோ அறிந்துகொள்ள முடியாததால் மேலும் பேச்சைத் தொடர்ந்தாள் எழுப்பவந்த முதலாமவள். மூடிய கண்களைத் திறக்காமலிருக்க இமைகள் இருப்பதைப் போல ஏதும் கேட்காமலிருக்க, காதுகளுக்கு எந்தமூடியும் இல்லையே? எனக்கூறும் விதமாக "வான்தடங்கண் மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவிதான்"

**தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி.**

என்றாள். அதற்கும் அசையாமல் சாபம் பெற்ற அகலிகைபோல் கல்லாகக் கிடந்தாள். எப்படியும் அவளை எழுப்பியே தீர்வது என்ற முடிவில்,

மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலும் விம்மிவிம்மி
மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும்
புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே!
என்னே!

என்று 'ஒரு பெண்ணை எழுப்பியபோது அவள் அடைந்த மெய்ப்பாட்டைப்பாரும்' என்றதொரு கற்பனைச் சரடை விட்டதும், அடிக்க அடிக்க அம்மி நகர்ந்ததைப்போல அவசர அவசரமாக எழுந்து வந்தாள். ஒருவர் இருவரானார்.

சேர்ந்த இருவரும் அடுத்தவளின் வீட்டு வாசலில் நின்று கொண்டு நூலின் இழைகளெல்லாம் சேர்ந்து, ஆடையாவது போல் எங்களோடு சேர்ந்து கொள்ள வா எனக்கூறி எழுப்புவதுபோல் "நேரி ழையாய்" எனக்கூப்பிட்டார்கள், ஆமாம், "நாம் பேசும்போது எப்போதும் பாசம் பரஞ்சோதிக் கென்பாயே" அதைமறந்துவிட்டு "போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ?" என இடித்துரைத்தார்கள்.

ஆடை நெய்யும் ஊடுபாவின் இழையாகச் சேர்ந்து கொள்ளும் நினைப்பில் வீதியிலிருந்து எழுப்பியவரை 'நேரிழையீர்' என விளித்தாள். இருந்தாலும் தான் முன்பு கூறியதைத்தன்னிடத்திலேயே சுட்டிக் காட்டியதால் மனம் வருந்தியவள், "சீசீ இவையும் சிலவோ? விளையாடி ஏசும் இடம் ஈதோ?" எனச் சீறிப்பாய்ந்தாள், 'நீர் அடித்தா நீர் விலகப் போகிறது' என்றபடி எழுப்பியவர்கள் அவள் கூறியதைப் பொருட்படுத்தாமல், விண்ணோர்கள், ஏத்துவதற்குக்

"கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேவன் சிவலோகன் தில்லைச்
சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர் யாம்!"

என்று படுக்கையில் கிடந்தவளையும் உள்ளடக்கியவாறு கூறியதும் சற்று மனந்தெளிந்து மகிழ்ந்து வந்து இருவரொடு மூவரானாள்.

மூவரும் நாலாமவளை எழுப்பினார்கள். ஆபரணத் தங்கந்தான் எவ்வளவு விலை ஏறினாலும் அதற்கோர் எல்லை உண்டு; ஆனால் விலைபேச முடியாத உன்புன்னகைக்கு ஏது விலை? எனத் தூங்கு பவளை "முத்தன்ன வெண்ணகையாய் என்ற மகிழ்ச்சி வார்த்தைகளைக் கூறி எழுப்பினார்கள், தூங்கியவள் வந்த பாடில்லை! ஆதலால்,

முன்வந்து எதிரெழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன்
என்றள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்!
வந்துன் கடைதிறவாய்! எனக் கூறிக் கெஞ்சினார்கள், நாக்கில் பட்ட சுவை உடனே மாறி விடுவதைப் போலச் சுடச்சுடப் பேசும் நீ மறந்து தூங்கிவிட்டாயே? என்று எழுப்பியவர்களின் வார்த்தை சுருக்கென்று பட்டதால் தூங்கியவள்,

பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்!
பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மை தீர்த்து
ஆட்கொண்டால் பொல்லாதோ?

என்றாள். பழஅடியீர்! பாங்குடையீர் என்றெல்லாம் இங்கிதமாகக் கூறியதைக் கேட்டவர்கள் மனம் குளிர்ந்து, ஆன்மீகத்திற்கு வரும் புதியவர்களுக்குப் பழையவர்கள் வழி காட்ட வேண்டும் எனத் தூங்குபவள் கேட்டுக் கொண்டபடி "எத்தோ நின் அன்புடைமை! எல்லோம் அறியோமோ?" என்று கூறியதும், படுக்கையில் கிடந்தவள் என்னையே திட்டு கிறது சரியா?" எனக் கேட்பாள்போல் "சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை?" என்றாள், பேச்சு பேச்சாக இல்லாமல் திசைமாறிப் போய் விட்டதாக உணர்ந்தவர்கள் எழுப்பவந்த எங்களுக்கு இத்தனையும் கேட்டுக் கொள்ள வேண்டும் என அலுத்துக் கொண்டவர்களாய் அடுத்தவளை எழுப்ப அடியெடுத்து வைத்தார்கள். தொட்டால் சிணுங்கிபோல் கோபித்துக் கொள்கிறீர்களே எனக் கூறியபடி எழுந்து வந்தவளுடன் சேர்ந்து நால்வரும் ஐந்தாமவளை எழுப்பினார்கள்.

ஐந்தாமவளின் தூக்கத்திற்கு அளவே இல்லை. வெண்மையும் குளிர்ச்சியும் கொண்ட முத்து ஒளியும் உடையது, அது போல் வெள்ளை உள்ளமும் குளிர்ந்த

பேச்சும் உடைய அவளின் கண் ஒளியைக் காணாமல் தூங்குகிறதே என்ற ஆதங் கத்தில் "ஒள் நித்தில நகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?" என அன்பாகக் கூறி எழுப்பினார்கள். அவளோ தூக்கத்தில் சமத்தி. சொன்னதைச் சொல்லும் கிளிபோல் என்னை எழுந்திரு எழுந்திரு எனத் திரும்பத் திரும்பக்கூறும், "வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?" என்று கேட்டதோடு பேச்சைத் தொடராமல் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதைப்போல மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

கயிற்றைக் கட்டியா மலையை அசைக்க முடியும்?... முடியாதே என்றபடி உறங்குபவளின் தூக்க சுகத்தை உணர்ந்தவர்கள் "விண்ணுக் கொரு மருந்தை, வேத விழுப்பொருளை கண்ணுக் கினியனைப் பாடிக் கசிந்து உள்ளம் உள் நெக்கு நின்றுருகும் இயல்பினர், மற்றும் தூங்குபவளைப் போலக் காலத்தை அவமே கழிக்காதவர்கள் என்பதால் "எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுவோம், அவ்வளவும் கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே! நீயே வந்து எண்ணிக் குறையில் துயில்" என்று ஆவேசமாக அசதியாக உரைத்தனர். தன்னைத் தூக்கப்பிரியர் எனச் சொல்லாமல் சொல்லிவிட்டார்களே என்ற அவமானம் தாங்காததால் மதகு திறந்த வெள்ளம் போல் பாய்ச்சலாக ஓடிவந்து எழுப்பியவர்களோடு சேர்ந்து கொண்டாள். ஆம், இப்பொழுது ஐந்துபேரும் சேர்ந்து ஆறாமவளை எழுப்பப்படை எடுத்தார்கள்.

நாமே கண்டுவிடுவோம் என்ற அகங்காரத்தால் மாலும் பிரமனும் காண முடியாமல்போன அண்ணாமலை ஈசனை நாம் அன்பால் கண்டு விடலாம் என்பாயே! அதை மறந்தா தூங்குகிறாய் எனக் கூறுவோர், "மாலறியா நான்முகனும் காண மலையினை நாம்போல் அறிவோம், என்றுள்ள பொக்கங்களே பேசும் பாலூறும் தேன்வாய்ப்படி நீ, கடைதிற வாய்" என்றனர், பழகப்பழகப்பாலும் தேனும் புளிக்கும் என்பார்களே அவைபோல மெய்யே பேசிவந்த நீ பொய்கூறத் தொடங்கி விட்டாயோ என ஆறாமவளின் அந்தரங்கத்தைப் போட்டுடைப்பார் போல எழுப்பியவர்கள் "பாலூறு தேன் வாய்ப் படி நீ கடைதிறவாய்" என்றார்கள், மாலும் பிரமனும் காணாதவனை நாம் கண்டுவிடலாம் என மெய்பேசியவள் மறந்து தூங்கிவிட்டதால் பொய்க்கு மாறிவிட்ட வஞ்சகி என்ற வார்த்தைகளைக் கொல்லும் ஆயுதமாகப் பயன்படுத்தியவர்கள் அதற்கும் எழுந்து வராததைக் கண்டு அவளை எழுப்பவேறோர் உபாயத்தைக் கையாண்டார்கள்.

கண்ணை மூட இமை உண்டு! மூக்கை மூட எது உண்டு? ஒன்றும் இல்லையே! நல்ல மணம் கெட்ட மணம் என அறிய மூக்கு தானே ஆதாரம். ஆதலால் தோன்றி மறையும் மணம் மிகுந்த பூக்களை வைப்பதால் மாறாத மணம் பெற்ற கூந்தலை உடையவளே பிறவி வாசனையை (மணத்தை) நீக்கவல்ல ஆண்டவனின் ஆன்ம மணத்தை நுகராமல் உறங்குகிறாயே எனக் கூறுவார் போல "தவக் குழலி" எனக்கூறி எழுப்ப முயற்சித்தவர்கள்,

**ஞாலமே!விண்ணே! பிறவே**
**அறிவரியான்**
**கோலமும் நம்மை ஆட்**
**கொண்டருளிக் கோதாட்டும்**
**சீலமும் பாடி சிவனே சிவனே என்று**
**ஓலம் இடினும் உணராய் உணராய்காண்**

என உறக்கக்கூறி உசுப்பினார்கள். ஆன்மாவின் ஆசாபாசக் கோதுகளை நீக்கிக் குணமும் மணமும் தரும் ஈசனைச்சிவனே என்று உணர்வாய் என்று எழுப்பியவர்கள் கூறிய வாசகம் திருவாசகமாகப்பட்டதால் துள்ளி எழுந்து வந்தவள் கூட்டத்தில் ஒருத்தியாகப் பதிவு செய்து கொண்டாள்.

ஆறு பெண்களின் பக்திப் பரவசப் பரிகாசப் பேச்சின் வெப்பம் உச்சத்தை எட்டியதால், "நாம் எழுப்பாமலே மானைப் போலத் துள்ளி வருபவளாயிற்றே இன்னும் வரவில்லையே! மானைப்போல மருண்டு மருண்டு தூங்குகிறாளே? நேற்று நம்மை வந்து எழுப்புவதாகச் சொன்னவள் வெட்கமில்லாமல் தூங்குகிறாளே! நமக்குப் போலத்தான் அவளுக்கும் விடிந்துவிட்டதே!" என்று ஆத்திரம் பொங்குமாறு,

வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து
தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு
உன்வாய்திறவாய்
ஊனே உருகாய்! உனக்கே உறும்

என்று பெண்கள் தங்கள் அருள் வெளிச்சம் காணப்புறப்பட்டு விட்டதால் வந்தால் வா என்ற கருத்தில், கல்லில் நார் உரிக்க முடியாததுபோல உன் தூக்கம் உனக்குத்தான் சரி என்று கன்னத்தில் அறைவது போலச் சொன்னார்கள், நெருப்பைத் தொட்ட படபடப்பில் நாம் எழுந்து போகாமலிருந்தால் வாழ்வில் பின்தள்ளப் படுவோம் என்ற அச்சத்தில் தாய்ப்பசுவைக் கண்ட கன்றுபோல் பாசத்துடன் பாய்ந்து வந்து சேர்ந்து கொண்டாள்.

இந்த எழுவரும் எட்டா இறைவனை எட்டிப்பிடிக்க, உறங்கும் எட்டாமவளை எழுப்ப முயற்சித்தார்கள். உறங்குபவள் மற்றவர்களைப் போல் இல்லாமல் தாய்போல முன்னரே எழுந்து கடமைகளைச் செய்யும் கண்ணியம் மிக்கவள் என்ற நினைப்பில் "அன்னே! என விளித்து எழுப்பினர். அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டதால்" வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா இடத்தியால் என்று வெறுத்து மொழிந்தார்கள். எழுப்பியவர்களின் வெறுப்புக்குக் காரணம் சிலவற்றைக் கூறும் போது, 'இறைவனை நினைப்பூட்டும் சங்கு, மணி, போன்ற சின்னங்கள் ஒலிப்பதைக் கேட்டும் சிவனே என்று வாய் திறவாததோடு, எழுப்பியவர்கள் தென்னாடுடைய சிவனே போற்றி எனக் கூறுவதில் உள்ள முதல் சொல்லாகிய 'தென்னர்' என்று கூறும் போதே "அனலில் உருகும் மெழுகாக உருகவில்லை" என்பதால் வன்னெஞ்சப் பேதை என வெறுத்து மொழிந்தார்கள். மேலும் அவளை விழிக்கவிடாமல் செய்த அவளது தூக்கத்தையும் பழிப்பார்போல "என்னே துயிலின் பரிசு" என்றதும் நானும் பெண்தானே, ஜடம் இல்லை எனக் கூறிக்கொண்டே வெளியில் உள்ளவருடன் சங்கமமானாள்.

எப்படியோ உறங்கிய எண்மரும் விழித்தெழுந்து விட்டாலும் கடைகோடி வீட்டுப்பெண் மட்டும் எழுந்து வர வேண்டும் என்று பேசியபடியே கன்னியர்கள் ஒன்பதாமவள் வீட்டு வாசலுக்குப் போய் 'யாரும் எழுப்பாமலே எழுந்து கூவும் கோழியின் குரலும் அதைத் தொடர்ந்து எழுந்து ஒலிக்கும் பறவைக் கூட்டங்களின் ஓசையும் நாதசுர உதயராகமும் கோயிற் சங்கொலியும் சப்த ஜாலங்களாக எங்கும் எதிர் ஒலிகளை எழுப்புகின்றனவே, அவையாவும் உன் காதுகளில் விழவில்லையா? நாங்களும் பரஞ்சோதியாம் விழுப்பொருளைப் பாடினோமே?' அதுவும் கேட்கவில்லை யென்றால் தெரிந்துகொண்டே அறிதுயில் கொள்ளும் திருமாலைக் காட்டிலும் ஏதும் தெரியாமலே தூங்கும் நீ கெட்டிக்காரிதான்! நாம் வழிபடத்தக்க ஒருவனோ சாதாரணமானவன் இல்லை! ஊழி பெயர்ந்தாலும் அழியாதவன். நம்மைப் போன்ற பெண்ணொருத்தியை இடப்பாகத்தே உடையவன் என்பதால் அவன் மூலம் அவன் நமக்கு எளிமையாய் அருள்வான், எனவே தோன்றிமறையும் பெரும்செல்வத்தைவிட அழியா அருட்செல்வத்தைப் பெற்றுப் பங்குபோட்டுக் கொள்ள வா" என்றனர். எங்கே அருட் செல்வம் கிடைக்காமல் போய் விடுமோ என்ற பேதலிப்பில் பேதையானவள் ஓடோடி வந்து கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

ஒன்பதின்பரும் நவக்கிரகங்களைப் போலல்லாமல் நவரசமான நவசக்திகளாய்க் கெம்பீர நடையிட்டுச் சென்று இறைவன் திருமுன்னர் ஒரு பிரகடனத்தை மொழிந்தனர். பழமைக்குப் பழையவனே! புதுமைக்குப் புதியவனே! உன்னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள் "உன்னடியார்தாள் பணிவோம், ஆங்கவர்க்கே பாங்காவோம்,. அன்னவரே எம் கணவர் ஆவார். உன் அன்பர் பணிசெய எங்களை ஆளாக்கு என்றனர். அப்படி நாங்கள் விரும்பியவாறு கணவர் வாய்க்கப் பெறாத நிலை ஏற்படாதவாறு இருக்க, எங்கள் பெருமானே நீதான் அனுக்கிரகம் செய்ய வேண்டும். ஏனென்றால் உலகியல் வெப்பத்தில் நாங்கள் காயப்படமுடியா தென்பதால் "எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேற்க" என்று ஆண்டவனை அடியார் மூலம் அனுபவிக்க இறைவனது இரு தாளையும் இறுக்கமாகப்

பற்றிக் கொண்டனர்.

பற்றற்றான் பற்றினைப் பற்றியவர்கள் பாவைநீராட வந்த நோக்கத்திற்கேற்பத் தாமரைப்பூங்குளத்தை நெருங்கினார்கள். பூம்பொய்கையோ அம்மையப்பராகக் காட்சி தருகிறது. அவர்கள் உண்மையில் புறத்தே தூய்மை பெற விரும்பியதோடு அகத் தூய்மை பெற வந்தவராதலினால் காதார் குழையாட, பைம் பூண் கலனாட, கோதை குழலாட, நீறைக் கையால் குடைந்து குடைந்து நீந்தி விளையாடி னாலும் ஆர்த்த பிறவித் துயர் கெட நாமார்த்தாடும் தீர்த்தம் போன்ற உணர்வில் தில்லைச் சிற்றம் பலத்தில் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் ஞானவாகிட்ட ஆட்டத்தில் பாடித்திளைத்தனர், என்றாலும் திருக் கோயில் பணிப் பெண்களைப் பார்த்து ஏதவன் ஊர்? ஏதவன்பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்?" என்று அவனைப் பற்றிய விலாசம் கேட்டு அவனை விரைந்து சென்று காண முற்பட்டார்கள். இப்படியாக நீரில் திளைத்து விளையாடியவர்களுக்கு ஓர் எண்ணம் வந்தது. இந்தக் குளத்திற்கு நீர் எப்படி வந்தது என்பதே அவர்கள் ஐயம்! மழையின்றி மாநிலத்தார்க் கில்லையல்லவா? மழையில் வந்த நீர் என்ற நினைப்பில் மேகத்திடம் விண்ணப்பிக்கத் தொடங்கி விட்டார்கள். எப்போதும் பொய்த்துப் போகாதபடி பெய்யவேண்டி உத்தரவும் போடுவார் போல்

**முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து**
**உடையான்**
**என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையான்**
**இட்டிடையின்**
**மின்னிப் பொலிந்து எம்பிராட்டி**
**திருவடிமேல்**
**பொன்னம் சிலம்பின்சிலம்பி**
**திருப்புருவம்**
**என்னச் சிலைகுலவி நந்தம்மை**
**ஆளுடையான்**
**தன்னில் பிரியா எம்கோமான்**
**அன்பர்க்கு**
**முன்னி அவன் நமக்கு முன்சுரக்கும்**
**இன்னருளே**
**என்னப் பொழியாய் மழை!**

என்றார்கள். சிவனது அருளே சக்தியானாலும் நேற்று பிறந்த சாதுக்களைக் காட்டிலும் இன்று பிறக்கும் கொம்பே வலுவுடையதுபோல அருட் சக்தியே உலகை ஆட்டுவிப்பதென்பதால் சிவனைப் பெண்கள் ஓரங்கட்டிவிட்டு, பெருமாட் டியின் ஆக்கத்தை மழைப்பாட்டாய்க் குழைந்து பாடினார்கள்.

நாம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவன்' என்பதை மறவாதவர்களாய் மாதொருபாகனை நினைத்தபடி அருளில் நனைந்து குளித்துக் கரையேறியதும் அவர்கள் கண்களுக்குச் சூரியோதய வெளிச்சத்தால் வான வீதியில் தாரகைகள் (விண்மீன்கள்) மறையத் தொடங்கிய காட்சியோடு அண்ணாமலை போன்ற ஞானப் பிழம்பொன்று காணப்பட்டதைக் கண்டு,

**பெண்ணாகி ஆணாய், அலியாய்,**
**பிறங்கொளிசேர்**
**விண்ணாகி மண்ணாகி இத்தனையும்**
**வேறாகி**
**கண்ணார் அமுதமுமாய் நின்றான்**
**கழல்பாடி வணங்கினார்கள்.**

அஞ்ஞானம் விலக அருள் ஞானம் பெறவந்த பெண்கள் வெறும் சூரியோதயக் குளியலிலா குளித்தார்கள்? இல்லவே இல்லை! ஞான சூரியக் கதிரொளியின் ஞானக்குளியலில் குளித்ததால் மலைமேல் ஏற ஏற கீழுலக மேடுபள்ள வேறுபாடுகள் தெரியாததைப் போலப் பக்திப் பரவசத்தில் மார்கழிப்பாவை நீராட்டத்தை முடித்துக் கொண்டு கூட்டமாகப் போற்றிப் பாடத் தொடங்கி விட்டார்கள்.

அதுதான் திருவெம்பாவையின் கூட்டுப் பிரார்த்தனை பாடலாகும். இந்தக் கூட்டுப் பிரார்த்தனை கூத்தப் பெருமானின் செவிகளில் பட்டது. பெண்களின் வேண்டுதலுக்கு அனுக்கிரகம் செய்ய நினைத்தான்.

ஆம்! மனம்போல் மாங்கல்யம் என்பார்களே அதனைத் தந்தருள, சேரமான் பெருமானின் பூசையை அங்கீகரிக்கும் விதமாகத் தன் பாதச் சிலம்போசையைக் காட்டியதுபோலப் பெண்களுக்கு நடனமாடும் தன் திருவடிப் பொலிவை வானவில்லின் ஏழுநிறம்போல ஏழுநிலைகளில் காட்டியருளினான். எப்போது




காட்டினான்? சில்லென்று மெல்லிய காற்று வீசும் ஆனந்த காலை வேளையில் ஆனந்த நடனத்துடன் காட்டியதால், பெண்கள் நாம் திருவடியைக் காணும் பேற்றுக்குக் "காலை வேளையல்லவா துணை செய்தது" என்ற நன்றியுணர் வோடு,

"போற்றியாம்
மார்கழி
நீராடேலோ
ரெம்பாவாய்"

என முதலில் காலைப் பொழுதிற்குப் போற்றி சொன்னார்கள்.

எல்லா மாதங்களிலும் இறைவனது ஆட்டம் இருந்தாலும் அவனுக்குகந்த மார்கழித் திருவாதிரைதான் சிறப்பு. எல்லாம் படைத்த இறைவனை உலகம் சுட்டிச் சொல்லும் போது "திருவாதிரையான்" என்றுதான் புகழ்கிறது என்று ஒரு பழம்பாடல் கூறுகிறது என நினைத்த கன்னியர்கள்,

"மன்னிய நான்மீன் மதிகனலி
என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்
-பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றே
அறையுமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு –

எனமுணு முணுத்தார்கள் பதஞ்சலி, வியாக்கிரபாதரான இருவர்க்கும் மார்கழித் திருவாதிரையில் தரிசனம் காட்டியவாறு போலவே கன்னியரின் மார்கழிப் பாவை நோன்பிற்கான பலனைத் திருவாதிரைப் புதுமையாகப் பாதங்காட்டிப் பாவையரைப் பக்குவப் படுத்தினான் ஆண்டவன்.

நட்சத்திரம், சந்திரன், சூரியன் என ஒளிமிக்க பொருள்களைப் படைத்தாலும் அந்த ஒளிமிக்கவற்றுள் திருவாதிரை நட்சத்திரத்தை தனக்குரியதாக்கிக் கொண்டதால் அவ்வுண்மையை உணர்ந்தபெண்கள் ஜோதிமயமான திருவாதிரையில், ஆம்! மார்கழித் திருவாதிரை ஆட்ட நாளில் பாவையர்கள் பாவை நோன்பை முடித்துக் கொண்டார்கள். அதன் வெளிப்பாடாகத் தாங்கள். கண்ணாரக் கண்டு விம்மிதம் உற்ற திருவடிக்குப் போற்றிக் கூறும் முகத்தான்.

போற்றி யருளுக நின் ஆதியாம்
பாதமலர்!
போற்றி யருளுக நின் அந்தமாம்
செந்தளிர்கள்!
போற்றி எல்லா உயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்!
போற்றி எல்லா உயிர்க்கும்
போகமாம்பூங்கழல்கள்! போற்றி
எல்லா உயிர்க்கும்
ஈறாம் இணையடிகள்!
போற்றி மால் நான் முகனும்
காணாத புண்டரிகம்!
போற்றி யாம் உய்ய ஆட்
கொண்டருளும் பொன்மலர்கள்

எனத் தம் ஏழேழ் ஜென்மத்திற்குத் தொடரும் பாத கமலத்திற்கு இவ்ஏழ்வகையான பாத கமலங்களே பாதுகாப்பு என்பதை ஏழுமுறையான திருவடிப்புகழ்ச்சியால் உறுதிப்படுத்தினர் பெண்கள்.

ஆக, தொடுப்பு, முடிப்பு, படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருள்பு எனும் ஏழ் சூழ்நிலைகளில் ஆண்டவன் ஆட, உலகம் ஆடுகிறது. இவ்வுண்மையைக் கண்டுணர்வதே ஆன்மாவின் கடன் என்பதை மணிவாசகர் உணர்த்தவே திருவெம்பாவைப் பாடலை உலகிற்கு அருளினார்.

இது திருவாசகத்தில் உள்ள எல்லாப்பாடல்களிலும் உயர்ந்தது என்பதால்தான் தில்லைக் கூத்தன் "பாவையாடிய வாயால் கோவை பாடுக" எனக் கேட்டான். எனவே நமது பாத கமலம் நீங்க கூத்தனின் பாத கமலங்களை எப்போதும் பணிவோமாக'!

# வைகுண்ட ஏகாதசி

பரமபதம் இலக்கு

மனிதன் தன் ஆயுள் முடிந்து, உடலை விட்டு உயிர் பிரிந்து விட்டால், "அவன் இறந்து விட்டான்" என்று கூறுவது உலக வழக்கு.

ஆனால், வைணவன் உயிர் பிரிந்தால், "அவன் பரமபதம் (அல்லது வைகுந்தம்) சேர்ந்தான்" என்று தான் சொல்ல வேண்டும் என்பர்.

அல்லது, "ஆசார்யன் திருவடி சேர்ந்தார்" (அவர் மூலம் பரமபதம் அடைந்தார்) என்றே கருதுவர்.

ஏன்?

"சரணம் என்று தனது தாள் அடைந்தார்க்கெல்லாம் மரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்று நம்மாழ்வார் அருளினார். (திருவாய்மொழி 9–10–5)

ஒவ்வொரு வைணவனும் வாழ்நாளில் ஸ்ரீவைகுண்டநாதனைச் சரண் அடைந்தவரே. ஆகவே அவனுக்கு நிச்சயம் முடிவில் வைகுந்தம் சேர்தல் எனும் நற்கதி உண்டு என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆகவே அவர்களுக்கு மரண பயம் கிடையாது.

மோட்சம், வைகுந்தம், பரமபதம், திருவடி சேர்தல் எல்லாமே ஒன்றுதான். அதுவே, ஒவ்வொரு வைணவனின் இலக்கு.

ஆகவேதான், வைகுந்த ஏகாதசி அன்று இலட்சக்கணக்கான வைணவர்கள் பரமபத வாசல் சேவைக்கு இரவு முழுவதும் கண் விழித்து காத்திருந்து பெருமாளைத் தரிசனம்



செய்து பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

எல்லா வைணவக் கோயில்களிலும் மார்கழி மாதத்தில் "அத்யயனோத்வசம்" என்று கொண்டாடப்படும் "பகல் பத்து", "இராப்பத்து" உத்சவங்கள் மிகவும் விசேஷம். அதிலும், "பூலோக வைகுண்டம்" என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கத்தில் அத்யயனோத்சவம் மிகப் பிரசித்தம். அப்போது ஆழ்வார் பாசுரங்களை இசையுடனும், அபிநயத்துடனும் விண்ணப்பிப்பார்கள், "அரையர்" என்று சிறப்புப் பெயருடன் அழைக்கப்படுபவர்.

பாஞ்சராத்திர ஆகம விதிகளின்படி, மார்கழி மாதத்தில் வளர்பிறை தொடங்கி முதல் இருபது நாள் பகவானுக்கு உத்சவம் செய்ய வேண்டும்.

ப்ரதமை முதல் தசமி முடிய பத்து நாட்கள் பக்தர்கள் அவரவர்கள் மொழியில் இயற்றப்பட்ட ஸ்தோத்ர ரூபங்களான பாடல்களைப்பாடி, உத்சவம் நடத்துவர். இந்தப் பத்து நாள் உத்சவத்துக்கு "அத்யயனோத்சவம்" என்பர். இது பகலில் செய்யத் தக்கது.

சுக்ல ஏகாதசி முதல் கிருஷ்ண பஞ்சமி முடிய பத்து இரவுகள் செய்வது "மோக்ஷோத்சவம்' என்பர்.

பகல் பத்து முடிந்து, இராப்பத்து ஆரம்பத்தில் ஏகாதசி உத்சவம் நடக்கிறது.

பகவான் பிரளய காலத்தில் ஆலிலை மேல் பள்ளி கொண்டு, தம்முடைய நாபீ கமலத்தில் இருந்து பிரம்மாவை சிருஷ்டித்த போது, பிரம்மா அகங்காரம் கொண்டார். உடனே, பகவானுடைய காதிலிருந்து இரண்டு அசுரர்கள் உண்டாகி, பிரம்மாவைக் கொல்ல முயன்றனர். பகவான், அவர்களிடம், "பிரம்மாவைக் கொல்லாதீர் உங்களுக்கு வேண்டும் வரம் கொடுக்கிறேன்" என்றார். அந்த இரு அசுரர்கள் மிகுந்த அகங்காரத்துடன் பகவானிடம் உனக்கே நாங்கள் வரமளிப்போம்", என்றனர். பகவான் "இப்படி அகங்காரமாகப் பேசும் நீங்கள் என்னால் வதைக்கப்பட்டு, மீண்டும் அசுரர்களாகவே பிறப்பீர்களாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். அரக்கர்கள் தங்கள் தவறை உணர்ந்து, "எங்களைத் தண்டிக்காதீர். உம்மோடு நாங்கள் ஒரு மாதகாலம் சண்டையிட்டு, கடைசியில் உம்முடைய அருளினால் நாங்கள் நற்கதியடைய வேண்டும்" எனப்பிரார்த்தித்தனர்.

அதன்படி, ஒரு மாத கால சண்டை நடந்து, முடிவில் தோல்வியுற்று, வதைப்பட்ட அசுரர்கள், "பகவானே, உம் சக்தியைத் தெரிந்து கொண்டோம். நாங்கள் உம்முடன் பரம பதத்தில் எப்போதும் வாழ்ந்து உமக்கே கைங்கர்யம் செய்ய வேண்டும்" என்று மன்றாடினார்கள்.

பகவான் மனமிரங்கி, அன்றே மார்கழி மாதம் சுக்ல ஏகாதசியன்று உத்ரத்வாரத்தை (வடக்கு நுழைவாயில்) திறந்து, அவ்வழியே சத்யலோகத்துக்கும் மேலுள்ள பரமபதத்தில் அந்த அசுரர்களைச் சேர்த்தார். அங்கே, ஆதிசேஷன் மேல் வீற்றிருந்து, நித்ய சூரிகளால் சூழப்பட்டிருக்கும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரகத்தைத் தரிசித்துப் பரமானந்தம் அடைந்தனர். பின்னர், அந்த அசுரர்கள் பகவானிடம், "பிரம்மா முதலானோர் யாவரும், பகவானை அர்ச்சாவதாரமாக பிரதிஷ்டை செய்து (அதாவது, பூலோகத்தில் திருக்கோவில்களில் பகவானை விக்ரக ரூபமாக எழுந்தருளச் செய்து), மார்கழி சுக்ல ஏகாதசியன்று எங்களுக்குப் பகவான் அருளியதை உத்சவமாக அனுஷ்டிக்க வேண்டும். அன்று, வடக்கு நுழைவாயில் வழியாக வெளியே எழுந்தருளும் பகவானைத் தரிசிப்பவர்களும், பகவானுடன் கூட அந்த வாசல் வழி வெளியே வருவோரும்

எத்தனை பாபிகளாயிருந்தாலும் மோக்ஷம் பெற வேண்டும்" எனப் பிரார்த்தித்தனர் பகவானும் அப்படியே அருள் புரிந்தார்.

**வேதத்திற்கு ஈடான திருவாய்மொழி**

**(திருமங்கை ஆழ்வார் வேண்டுகோள்)**

திருமங்கை ஆழ்வார் தாம் இயற்றிய அற்புதமான "திருநெடுந்தாண்டகம்" என்னும் நூலை திருவரங்கன் திருவடிகளில் வைத்து, "திருவரங்கா! நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு வேதத்துக்குச் சமமான இடம் அளித்து, மார்கழிமாத சுக்ல ஏகாதசியன்று, வேதங்களுடன் திருவாய் மொழியையும் தாங்கள் கேட்டருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

பகவான் அந்த பிரார்த்தனையை மகிழ்ச்சியுடன் ஏற்று, திருநகரியிலிருக்கும் நம்மாழ்வாருக்கு ஸ்ரீமுகம் (கடிதம்) அனுப்பி, அவருடன் மதுரகவிகளையும் திருவரங்கம் எழுந்தருளச் செய்து, 'சடகோபன்' என்ற பெயருடன் இருந்த ஆழ்வாருக்கு, "நம்மாழ்வார்" என்று திருநாமம் சாற்றி, ஏகாதசியன்று வேதங்கள் ஆரம்பம் ஆனதும், இரவில் மதுரகவிகானம் செய்த திருவாய் மொழியையும் கேட்டருளினார்.

தினந்தோறும் இப்படியே நடந்து, பத்தாம் நாள் வேதங்களைப்பூர்த்தி செய்து முறைப்படியே அவரைத் தம்முடைய திருவடிகளில் சேர்த்துக் கொண்டு, அவருக்குத் தம்முடைய மாலை, திருமண் காப்பு முதலியவற்றை அளித்து அவரைத் திருநகரிக்கு அனுப்பி வைத்தார் நம்பெருமாள் எனப்படும் திருவரங்கன்.

தமிழ்வேதம் திருவாய்மொழி முன் சேவிக்கப்பட்டது திருமங்கை ஆழ்வார் காலத்தில். பின்னர், நாதமுனிகள், இராமனுஜர் போன்ற பூர்வாசார்யர்களால் பல இடையூறுகள், படையெடுப்புகளுக்கு இடையே பாதுகாக்கப்பட்டு, ஸ்ரீமணவாள முனிகளால் உறுதியாக நிலைக்கொண்டது.

இது வைகுண்ட ஏகாதசி எனப் பிரசித்திப் பெற்ற உத்சவத்தின் புராணத்தின் சுருக்கமாகும்.மேலும், பரமபதவாசல் திறக்கப்படும் அந்த புண்ய தினத்தில், திருமங்கை ஆழ்வார் எப்படி நம்மாழ்வாரின் திருவாய் மொழியை, தமிழ் வேதத்தை, வடமொழி வேதத்துக்குச் சமம் என பகவானிடம் வாதிட்டு, பகவானும் அதை ஏற்று, தமிழ் வேதத்தையும் கேட்டு மகிழ்ந்தான் என்பதையும் தெரிந்து கொண்டோம்.

வைகுண்ட ஏகாதசியின் பல பெருமை களில் சில துளிகளே இவையாகும்.

**முனைவர் டி.எஸ். ராமஸ்வாமி.**


**திருக்கோயில்**

**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# சாவித்திரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சத்திய வாக்குள்ள அந்தத் தவசிகளால் இவ்வண்ணம் தேற்றப்பட்ட தியுமத்சேனன், அத்தரும வசனங்கள் முழுமையும் ஆராய்ந்து உறுதியுள்ளவன் போலானான். பிறகு ஒரு முகூர்த்த காலத்திற்குப் பின், சாவித்திரி தனது கணவனுடன் மிக்க மகிழ்ச்சியுடன் அந்த இரவிலேயே வந்து ஆசிரமத்தில் புகுந்தாள். அங்கிருந்த எல்லோரும் பார்த்தவுடன் எழுந்திருந்தார்கள். மகிழ்ந்தார்கள். சத்தியவானுடைய தாய், தந்தையர் அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதார்கள்; மறையோர்கள், ''வேந்தே! புத்திரனோடு சேர்ந்தவனும் கண்களை அடைந்தவனுமான உன்னைப் பார்த்து நாங்கள் எல்லாரும் உன்னுடைய க்ஷேமத்தை வினவுகிறோம்; குணசீல! புத்திரனது வரவு, சாவித்திரியின் தரிசனம், கண்ணொளியைப் பெற்றது இந்த மூன்றினாலும் நீ வளர்ச்சியை அடைந்திருக்கிறாய்; எங்களெல்லோராலும் எது சொல்லப்பட்டதோ அது அப்படியேயாகும். இதில் ஐயமில்லை. மேலும், மேலும் செல்வப் பெருக்கமானது உனக்கு சீக்கிரமே உண்டாகும்,'' என்றார்கள்.



பிறகு அந்த அந்தணர்கள் அனைவரும் அங்கு அக்கினியை நன்றாக பிரகாசிக்கச் செய்து தியுமத்சேனன் அருகில் உட்கார்ந்தார்கள். சைப்பையும் சத்தியவானும் சாவித்திரியும் ஒருபுறத்தில் நின்றார்கள். அவர்கள் துன்பம் நீங்கி எல்லோராலும் அனுமதி கொடுக்கப்பட்டு உட்கார்ந்தார்கள்.

அரசனுடன் உட்கார்ந்திருந்த முனிவர்கள் ஆவலுடன் மன்னர் மகனை நோக்கி, "அரச குமார! யாது காரணத்தால் பத்தினியுடன் முன்னரே வரவில்லை? ஏன் நடுநிசியில் வந்தாய்? உனக்கு என்ன தடை ஏற்பட்டது? பிரபுவே! மாதாவும் பிதாவும் நாங்களும் வருத்தத்தையடைந்தோம்; உனது தாமதத்தின் காரணத்தை அறியோம்; அதனை நீ உரைப்பாய் என்று வினவினார்கள். சத்தியவான், "பிதாவினால் அனுமதி கொடுக்கப்பட்ட நான் சாவித்திரியுடன் சென்றேன்; வனத்தில் விறகுகளை பிளக்கும்பொழுது எனக்குத் தலைவலியுண்டாயிற்று; வேதனையினால் நான் நெடுநேரம் தூங்கிவிட்டேனென்று எண்ணுகிறேன்; இதற்கு முன் ஒரு பொழுதும் நான் அவ்வளவு நேரம் தூங்கினவனல்லேன்; உங்களனைவருக்குமே சந்தாபம் உண்டாக வேண்டாமென்கிற காரணத்தினால் நடுநிசியில் நான் இங்கு வந்தேன். இந்த விஷயத்தில் வேறு காரணம் இல்லை,'' என்றான்.

கௌதமர், ''சத்தியவானே! நின் தந்தைக்குத் திடீரென்று கண் கிடைத்திருக்கின்றது; இதற்கு காரணத்தை நீ அறியாய், சாவித்திரி சொல்வதற்குத் தகுதியுள்ளாள். சாவித்திரி! ஒளியினால் உன்னை சாவித்திரி தேவியைப் போலவன்றோ அறிகிறேன்? இந்தச் சம்பவத்தின் காரணத்தை நீ அறிவாய்; ஆகையால், உண்மையைச் சொல்,'' என்று வினவினார்.

சாவித்திரி, ''நீர் அறிந்தது சரிதான்; உங்களுடைய எண்ணம் வேறுவிதமாகாது; எனக்கு ரகசியம் ஒன்றுமில்லையன்றோ? உண்மையை உரைப்பேன். மகாத்துமாவான நாரத முனிவர் எனது பதியின் தீர்க்காயுளை வேண்டித் தவவொழுக்கத்துடனிருந்தேன். நாரதர் குறிப்பிட்ட அந்த நாள் இன்று வந்து விட்டது; அதனால், இன்று நான் இவரைத் தனியாக விடவில்லை; உறங்கிக் கொண்டிருக்கிற என் கணவரது பக்கத்தில் அறக்கடவுள் வந்தார்; அவர் இவரைப் பாசத்தாற் கட்டிக் கொண்டு பிதுருக்களாலடையப்பட்ட திசையில் கொண்டு போனார்; நான் அவரைத் தொடர்ந்து போய்ச் சத்தியமான வசனத்தால் அந்த யம பகவானை துதித்தேன்; அவர் எனக்குத் தனித்தனியாக ஐந்து வரங்களை வழங்கினார்; எனது மாமனாருக்கு கண்களும், இராஜ்யமும் உண்டாகுமாறு இரு வரமும், எனது பிதாவுக்கு நூறு புத்திரர்களும் எனக்கு நூறு புத்திரர்களும் உண்டாகுமாறு இரு வரமும், என் கணவர் நானூறு வருடம் சுகித்திருக்க ஒரு வரமுமாகும். பதியினுடைய உயிரை விரும்பி இந்த விரதத்தை நான்

உறுதியுடன் செய்தேன். இதுதான் நடந்த சம்பவம். இந்த எனது துன்பம் முடிவில் இன்பமாய் முடிந்தது," என்றாள்.

இருடிகள், "கற்பிற் சிறந்த காரிகையே! நற்குலத்திற் பிறந்தவரும் நல்லொழுக்கமும், விரதமும், புண்ணியமும் பொருந்தியவளுமான உன்னால், இருள்மயமான மடுவில் முழுவதும் துன்பமாகிய மிருகத்தால் துரத்தப் பட்டதுமாகிய அரசனுடைய குலமானது மீண்டும் கை தூக்கி மேலே விடப்பட்டது. பாக்கிய வதியே! உன்னால் பிறந்த வீடும், புகுந்த வீடும் பெருமையுற்றன," என்றார்கள். ஒன்று சேர்ந்திருக்கிற மாதவர்கள் மகாபதி விரதையாகிய அந்த உத்தமியைப் பலவாறாகப் புகழ்ந்தும், பூசித்தும் மன்னனிடம் விடை பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் தங்கள் வீடுகளுக்கு சுகமாகச் சென்றார்கள்.



அன்று இரவு கழிந்து சூரியன் உதித்தவுடன் எல்லா தவசிகளும், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஒன்று கூடினார்கள். தியுமத்சேனனும் சைப்பையும் மருமகளது பெருமையை நினைத்து வாயார வாழ்த்திக் கொண்டாடினார்கள். மகரிஷிகள், சாவித் திரியினுடைய மகிமையை தியுமத்சேனனுக்கு அடிக்கடிச் சொல்லியும் இன்னும் சொல்ல வேண்டுமென்ற விருப்பமே கொண்டார்கள். பிறகு சாலுவதேயத்திலிருந்து எல்லா ஜனங்களும் அரசனிடம் வந்தார்கள். அவனுடைய திருவடியில் விழுந்து வணங்கி, "தங்களுடைய மந்திரியார் அந்தப் பகைவனைக் கொன்று விட்டார்; அரசரே! பகைவனுடைய படை பயந்து ஓடி விட்டது; எல்லா ஜனங்களும் 'கண்ணுள்ளவரோ கண்ணில்லாதவரோ அந்த தியுமத்சேனரே நமக்கு அரசராக இருக்க வேண்டும்' என்று ஒரே எண்ணமாக இருக்கிறார்கள்; இந்த நிச்சயத்துடன் ஜனங்களால் அனுப்பப்பட்டோம். இதோ வாகனங்களும் தங்களுடைய நால்வகைச் சேனைகளும் வந்திருக்கின்றன. மண்டலேசுவரரே! புறப்படுவீராக; உமக்கு மங்களம். உம்முடைய விஜயமானது நகரத்தில் முழக்கப்பட்டது. உமது மூதாதைகள் பரம்பரையாக அரசு செய்து வந்த அரியணையில் வீற்றிருந்து நெடுங் காலம் அரசு செய்வீராக" என்று சொல்லி மலர்ந்த கண்களுடன் அரசனைத் திரும்பவும் வணங்கினார்கள்.

பிறகு, மன்னன் அந்தத் தவவனத்திலுள் ளவர்களும் வயது முதிர்ந்தவர்களுமான எல்லா முனிவர்களிடமும் பிரியாவிடை பெற்றுக்கொண்டு நகரத்தைக் குறித்துச் சென்றான். சைப்பையும் சாவித்திரியோடு கூட சேனையினால் சூழப் பட்டவளாக நல்ல விரிப் புகளுள்ளதும் ஒளிவீசுவதும் மனிதர்களால் தூக்கப் பட்டதுமான பொற் பல்லக்கி லூர்ந்து தனது நகரஞ் சேர்ந்தான். நல்ல நாளில் புரோகிதர்கள் சகல வைப வங்களுடன் தியுமத் சேனனுக்கு மகுடா பிஷேகஞ் செய்தார்கள். ஒப்பற்ற வீரனாகிய சத்தியவானுக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் புரிந்தார்கள். இந்த நற்செய்திகளைக் கேட்டுச் சாவித்திரியின் பிதாவாகிய அச்சுவபதி மன்னன் பரிவாரங்களோடு வந்து, சம்பந்தியையும் மருமகனையும் மகளையும் பார்த்துக் கொண்டாடி மகளது அற்புதச் செயல்களைக் கேட்டு, உடலும் உளமும் பூரித்து, குலத்தை விளக்க வந்த கொடியிடையாளை வாழ்த்தினான்.

சில நாட்களுக்குப் பின், சாவித்திரிக்குப் புகழை வளர்க்கிற தேவகுமாரர்களைப் போன்ற நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். அப்படியே தேசாதிபதியாகிய அச்சுவபதிக்கு மாளவியிடம் சூரர்களும் போரில் பின்வாங்காத வீரர்களும் மிக்க பலசாலிகளுமாகிய நூறு குமாரர்கள் பிறந்தார்கள். சாவித்திரியினால்தான், தகப்பன், தாய், மாமியார், மாமனார், கணவன், குலம் ஆகிய அனைவரும் கரையேற்றப்பட்டார்கள். மகா பதிவிரதா சிரோன்மணியாகிய அவ்வுத்தமியால் தந்தையின் குலமும், தனது கணவனது குலமும் வளர்ச்சியுற்றன. எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்து இன்றும் என்றும் அழியாத புகழுடம்பைப் பெற்று நிலவுகிறாள்.

பெண்மணிகள் இக்கற்பரசியின் உத்தமமான சரித்திரத்தை அன்புடன் ஊன்றிப் படித்து, அவ்வண்ணம் நல்லொழுக்கத்தை மேற் கொண்டு பிறந்த வீட்டையும், புகுந்த வீட்டையும் வளர்ச்சியுறச் செய்து, பொன்றாப் புகழைப் பெறுவார்களாக. அங்ஙனமே "எனதுளமேவிய ஸ்ரீ வள்ளிநாயகியார்" திருவருள் புரிவாராக.

முற்றிற்று.

# மார்கழியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்

**இயற்பகை நாயனார்.**

சோழவள நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர். உலக இயலுக்குப் பகையானவர். அதனால் இயற்பகையார். அருளின் இயலை ஒருபோதும் பகையாதவர். பெருஞ் செல்வம் படைத்தவர். சிவனடியார் விரும்பிக் கேட்கும் எதனையும் இல்லை என்னாது வழங்கும் இயல்பினையுடையவர்.

இவருடைய வள்ளல் தன்மையை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு, சிவபெருமான் தூர்த்த வேதிய அடியார் கோலத்துடன் வந்தார். இயற்பகையார் அவரை வரவேற்று வந்தனை வழிபாடு செய்தார். வந்த அடியார் "மன்னு காதலுன் மனைவியை வேண்டி வந்தனம்" என்றார். இயற்பகையார் உள்ளம் உவந்து, "என்பால் உள்ளதனையே கேட்டருளினீர்" என்று கூறி மனைவியாரை வழங்கினார். "உறவினர் தடுப்பார்கள்; நீ துணையாக வருக" என்றார் அடியார்.



இயற்பகையார் வாள் தாங்கி உடன் சென்றார். தடுத்த உறவினர்களைக் கொன்று குவித்தார். திருச்சாய்க்காட்டின் அருகில் இனி நீ போகலாம்" என்றார் இறைவர். இயற்பகையார் இறைஞ்சி மனமகிழ்ந்து திரும்பினார். பொய்யிலா உள்ளத்தன்; திரும்பிக்கூடப் பார்க்காமல் போகின்றான்" என்று மகிழ்ந்தார் இறைவர். இயற்பகை நாயனாரை ஓலம் இட்டு அழைத்தருளினார்.

**இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டுநீ**
**வருவாய் ஓலம்!**
**அயர்ப்பிலா தானே ஓலம்! அன்பனே**
**ஓலம்! ஓலம்!**
**செயற்கருஞ் செய்கை செய்த தீரனே**
**ஓலம்! என்றான்**
**மயக்கறு மறைஓலமிட்டு மாலயன்**
**தேடநின்றான்.**

இயற்பகையார் விரைந்து ஓடினார். அங்கே அருந்தவர் இல்லை. பெருந்திரு மனைவியார் இருந்தார். வந்தவர் எங்கே? என்று திகைத்தார். விடைமீது விமலன் காட்சியளித்தான். எல்லையில்லாத

இன்பத்துடன் போற்றினார். இயற்பகையார் மனைவியாருடன் சிவபதம் பெற்றார். அவருடைய வாளால் மாண்ட உறவினரும் வானுலகில் இன்பம் எய்தினார்கள்.

புகார்–வணிகர். மார்கழி–உத்திரம்.



**சடைய நாயனார்**

நடுநாட்டில் திருநாவலூரில் ஆதிசைவர் திருக்குலத்தில் தோன்றியவர் சடையனார். நம்பியாரூரரைப் புதல்வராகப் பெற்றார்.

திருநாவலூர்–ஆதிசைவர். மார்கழி–திருவாதிரை

**சாக்கிய நாயனார்**

திருச் சங்கமங்கையில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் சாக்கியர். இவர் புறச் சமயமாம் புத்தமதத்தினர். காஞ்சிபுரம் வந்து உய்யும் வழி எது என்று பல வழிகளையும் ஆராய்ந்தார். புத்த நூல்களை ஓதினார். அது உய்யும் நெறியன்று என உணர்ந்தார். சைவநெறி ஒன்றே உய்யு நெறி யெனத் திருவருளால் உணர்ந்தார்.

**செய்வினையும் செய்வானும் அதன்**
**பயனும் கொடுப்பானும்**
**மெய்வகையால் நான் காகும் விதித்த**
**பொருள் எனக் கொண்டே**
**இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்**
**கில்லையென**
**உய்வகையால் பொருள் சிவன்என்**
**றருளாலே உணர்ந்தறிந்தார்.**



"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர் சங்கரன்தாள் மறவாமை பொருள்" என்று எண்ணித் தான் புனைந்திருந்த புத்தவேடத்தைக் களையாமல் சிவனடி சிந்தித்திருந்தார். காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமானது சிவலிங்கம் என உணர்ந்தார். ஒரு வெளியிடத்தில் சிவலிங்கத்தைக் கண்டார். அளவற்ற மகிழ்ச்சியினால் செய்வது இன்னது என்று அறியாதவராய் அங்கிருந்த ஒரு கல்லை யெடுத்து சிவலிங்கத்தின் மீது எறிந்தார்.

பெற்றவர்கள் தங்குழந்தைகள் வன்செயல் புரியினும் குழந்தையின் பாசத்தால் இன்புறுவது போல் இறைவர் மகிழ்ந்து இன்புற்றார்.

அதுவே திருவருட் செயல் என்று நாள்தோறும் இறைவன் மேல் கல்லெறிந்து வழிபாடு செய்து வந்தார். கல்லெறிந்ததை இறைவன் மலர் எறிந்ததாகக் கொண்டார். ஒரு நாள் உண்ணப் புகும்போது "ஆ! எம் பெருமானைக் கல்லால் எறியாமல் உண்ணப் புகுந்தனே" என்று ஓடி ஒரு கல்லெடுத்து எறிந்தார். சிவபெருமான் விடைமீது காட்சிதந்து கயிலை ஏகினார்.

சங்கமங்கை– வேளாளர் மார்கழி–பூராடம்

**மானக்கஞ்சாற நாயனார்**

சோழ நாட்டில் கஞ்சாறு என்ற ஊரில் வேளாளர் திருக்குலத்தில் பிறந்தவர் மானக்கஞ்சாறர். அரச சேனாதிபதியாக விளங்கும் பெருமையுடையது அவர் பிறந்த குடி அவருக்கு அழகின் கருவூலம் போன்ற ஒரு பெண் பிறந்தாள்.

குழைக்கலையும் வடிகாதில்
கூத்தனார் அருளாலே
மழைக் குதவும் பெருங் கற்பின்
மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும் வினைப் பயன் சூழ்ந்த
இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்கு நெறி தமக்குதவப் பெண்
கொடியைப் பெற்றெடுத்தார்.

பெண்மணி இனிது வளர்ந்தாள். ஏயர்கோன் கலிக்காமருக்கு அப்பெண்மணியைத் தருவதாக முடிவு செய்தார்கள். திருமண ஏற்பாடு வெகு சிறப்பாக நடந்து கொண்டு இருந்தது. எங்கும் அலங்கரித்து மேளதாளம் முழங்கின.

மாப்பிள்ளை மங்கல வாத்தியம் முழங்க வந்து கொண்டிருக்கிறார். சிவபெருமான் மாவிரத சைவ முனிவராக வந்தருளினார். மானக்கஞ்சாறர் அவரை அளவற்ற அன்புடன் தொழுது உபசரித்தார். திருமணச் செல்வியாக நின்ற மகளை அவரை வணங்குமாறு செய்தார். நீண்ட கூந்தலைப் பார்த்து "இது நமது பஞ்சவடிக்கு ஆகும்" என்றார்.

உடனே மானக்கஞ்சாறர் மணமகளின் நீண்ட கூந்தலை அரிந்து வழங்கினார். உடனே சிவபெருமான் விடை மீது காட்சி கொடுத் தருளினார். பூமாரி பொழிந்தது. கூந்தல் வளர்ந்தது. ஏயர்கோன் கலிக்காமர் நிகழ்ந்த பரிசுகளைக் கேட்ட எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார். திருமணம் இனிது நடைபெற்றது. மானக்கஞ்சாறர் திருத் தொண்டுகள் பல புரிந்து சிவனடி சேர்ந்தார்.

கஞ்சாறு–வேளாளர். மார்கழி–சுவாதி.

**வாயிலார் நாயனார்.**

தொண்டை நன்னாட்டில், திருமயிலாப்பூரில் வேளாளர் குலத்தில் தோன்றினவர் வாயிலார். இவர் சிறந்த தபோதனர். வாய் பேசாது மௌன விரதம் பூண்டு தவஞ் செய்தார். அதனால் வாயிலார் எனப் பெயர் பெற்றார்.

மறவாமையால் மனக்கோயிலில் ஞானம் என்னும் ஒளிவிளக்கை யேற்றி, ஆனந்தம் என்னுந் திருமஞ் சனம் ஆட்டி, அன்பு என்னும் அமுது படைத்து இடைவிடாது இறைவனை வழிபட்டு இறையடி சேர்ந்தார்.

மயிலை–வேளாாளர் மார்கழி–ரேவதி.





**தொகுப்பு: திருத்தொண்டர் அறுபத்து மூவர் வரலாறு**









சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் டி.புதுப்பட்டி, கீழ்நிலை, வஞ்சினிப்பட்டி கிராமங்களிலுள்ள ஆதிதிராவிடர் திருக்கோயில்கள் திருப்பணிக்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் நிதி உதவி வழங்கி சிறப்பித்தார். அரளிக்கோட்டை அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெறும் திருப்பணியினை பார்வையிட்டார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப அவர்களும் முக்கிய பிரமுகர்களும், அறநிலையத்துறை அலுவலர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






25.10.2009 அன்று படைவீடு அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலின் புதிய ஐந்து நிலை இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா, செயல் அலுவலர் குடியிருப்பு, தங்கும் குடில்கள், அர்ச்சகர் குடியிருப்பு திறப்பு விழா, மற்றும் நூலகத் துவக்கவிழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.









25.10.2009 அன்று திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலின் பக்தர்கள் இளைப்பாறும் கூடம், கிரிவலப்பாதையில் நவீன திருமணக்கூடம், நவீன கழிப்பிடம், திருக்கோயில் பணியாளர் குடியிருப்பு, கோசாலை பராமரிப்புக்கூடம் ஆகிய திருப்பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவும், புதிய மடப்பள்ளி கட்டடம் திறப்புவிழாவும், பள்ளிகொண்டப்பட்டு சின்னக்காங்கியனூர் அருள்மிகு நல்லாயி அம்மன் திருக்கோயில் பக்தர்கள் மண்டபத் திறப்பு விழாவும், திருவண்ணாமலை அருள்மிகு தி.பூ.சூரியநாராயண செட்டியார் அன்னதான தேவாரப் பாடசாலை அறக்கட்டளை வணிகவளாகத் திறப்பு விழாவும் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களும் அடிக்கல் நாட்டியும், திறப்பு விழா மேற்கொண்டும் சிறப்பித்தார்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் அறங்காவலர்களும், முக்கிய பிரமுகர்களும், பொது மக்களும் இவ்விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





22.11.2009 அன்று திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் தங்கத்தேர் வெள்ளோட்ட விழா மற்றும் அருள்மிகு வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் கட்டுமானப் பணி துவக்கவிழா நடைபெற்றன.

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. செ. காந்தி செல்வன் அவர்களும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. வி.பி.துரைசாமி அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப அவர்களும் முக்கிய பிரமுகர்களும், பொதுமக்களும், அறநிலையத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஊட்டத்தூர் சுத்தரத்தினேசுவரர்





திருச்சிராப்பள்ளியில் இருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையில், சுமார் 40 கி.மீ., தொலைவில் பாடாலூர் என்ற ஊர் உள்ளது. இவ்வூரிலிருந்து கிழக்கே 4 கி.மீ., தொலைவில் அமைந்துள்ள ஊட்டத்தூர் என்ற ஊரில் வழிபாடு சிறப்பு மிக்க அகிலாண்டேசுவரி சமேத சுத்தரத்தினேசுவரர் கோவில் அமைந்துள்ளது.

அப்பர் பெருமான் சேத்திரக்கோவை திருத்தாண்டகத்தில் இக்கோயிலைப் போற்றுகின்றார்.

"நரையூரில் சித்தீச்சரம் நள்ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை
தோணிபுரம் துருத்தி சோமேச்சரம்
உறையூர் கடல் ஒற்றியூர் ஊற்றத்தூர்
ஓமாம்புலியூர் ஓர் ஏடகத்தும்
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூரும்
கயிலாய நாதனையே காணலாமே"

எனப் போற்றுகின்றார். எனவே, இக்கோயில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வழிபாட்டில் சிறந்து விளங்கியிருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

திருக்கோயில் அமைப்பு:

கிழக்கு நோக்கிய திருக்கோயில். இரண்டு திருச்சுற்றுக்கள் கொண்டு விளங்குகிறது. நுழைவு வாயில் எழு நிலை கோபுரம் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. கோபுரத்தில் நுழைவு வாயிலுக்கு மேலே உள்ள நிலையில் கல்லால் ஆன சாளரம் (ஜன்னல்) இருப்பதைக் காணலாம். மாசி மாதம் 12, 13, 14 தேதிகளில் இதன் வழியே சூரிய ஒளி பாய்ந்து, கருவறையில் இறைவன் மீது படும் அற்புதக் காட்சியைக் காணலாம்.

கோபுரத்தை அடுத்து சபா மண்டபம் உள்ளது. இதில் கொடி மரம், பலிபீடம், நந்தி ஆகியவை அமைந்துள்ளன. நந்தியெம் பெருமானின் கம்பீரமான தோற்றம் நம் கருத்தை கவர்கிறது. பிரதோஷம் அன்று நந்திக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இச்சபா மண்டபத்து விதானத்தில் 27 நட்சத்திரங்கள், 12 இராசிகள், நவக்கிரகங்களின் வடிவங்கள் அழகிய

கி.ஸ்ரீதரன், துணை தொல்லியல் கண்காணிப்பாளர் (ஓய்வு)
தொல்லியல் துறை.

புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறது. இது ஒரு அரிய கலைப் படைப்பு ஆகும்.

**அம்பாள் சன்னதி:**

இரண்டாவது திருச்சுற்றில் கிழக்கு நோக்கி அம்பாள் சன்னதி அமைந்துள்ளது. அம்பாள் அகிலாண்டேசுவரி என்ற பெயருடன் அங்குசம், பாசம் தாங்கியும் அபய – வரத கரங்களுடன் அருள் வழங்கும் கோலத்தைக் கண்டு தரிசிக்கலாம். இக்கோயிலில் பணிபுரிந்த நடன மகளிருள் ஒருத்தியான உமைஆழ்வி என்ற சிவகாம சுந்தரி மாணிக்கம் என்ற பெண் இச்சன்னதியைக் கட்டினாள் என்பதை இங்கு காணப்படும் கல்வெட்டால் அறிந்து கொள்கிறோம். மூன்றாம் குலோத்துங்க சோழன் கால கலைப்படைப்பாக அம்மன் சன்னதி விளங்குகிறது. கருவறை தேவ கோட்டங்களில் இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்ற மூன்று சக்திகளின் வடிவங்களைக் காண்கிறோம். சக்தி வழிபாடு இக்கோயிலில் சிறந்து விளங்கியதற்கு அம்பாள் சன்னதி சான்றாக விளங்குகிறது.

**சுவாமி சன்னதி:**

அடுத்து சுவாமி சன்னதிக்கு செல்கிறோம். சன்னதிக்கு முன் கிணறு ஒன்று உள்ளது. வற்றாத ஜீவ நதிபோல, இறைவன் அபிடே கத்திற்கு இக்கிணற்று நீர் பயன்படுகிறது. கருவறையில் இறைவன் லிங்க வடிவிலே காட்சி தருகிறார். இறைவன் சுத்தரத்தி னேசுவரர் என்று அழைத்துப் போற்றப் படுகின்றார். ஆனால், இறைவன் பெயரில் தான் எவ்வளவு மாற்றங்கள்!

இன்று இவ்வூர் ஊட்டத்தூர் என அழைக்கப்பட்டாலும், இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் 'ஊற்றத்தூர்' என்றே குறிப்பிடப்படுகிறது. இறைவன் பெயரை, ராஜராஜசோழன் – ராஜேந்திர சோழன் காலத்தில் **'ஊற்றத்தூர் பெருமானடிகள்'** என்றும், பிற்கால சோழ மன்னர்கள் காலத்தில் **'தொகுமாமணி ஆண்டார்'**, **'தொகுமாமணி நாயனார்'** எனவும் அழைக்கப்படுகின்றார். விஜய நகர மன்னர் காலத்தில் **'துய்ய மாமணி நாயனார்'** என அழைக்கப்பட்டார். இப்பெயரே காலப்போக்கில் மாற்றம் பெற்று சுத்தரத்தினேசுவரர் என அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

**கிழக்கு நோக்கிய நந்தி**

இறைவன் எழுந்தருளியுள்ள கருவறைக்கு முன் அர்த்தமண்டபத்தின் ஒரு பகுதியில் கிழக்கு முகமாக இறைவனை நோக்காமல் நந்தி அமர்ந்திருப்பதைக் காணலாம். இதுகுறித்து ஒரு புராணக் கதையும் வழக்கில் இருந்து வருகிறது. கங்கை, யமுனை, சரசுவதி, நர்மதை, காவேரி, சிந்து, துங்கபத்ரா ஆகிய ஏழு நதிகளில் யார் பெரியவர் எனத் தர்க்கம் ஏற்பட்டு இங்கு வந்து சிவபெருமானிடம் முறையிட்டனராம். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும்படி நந்தி



தேவருக்கு சிவபெருமான் கட்டளையிட்டார். அதன்படி நந்தி தேவர் ஏழு நதிகளையும் விழுங்கி விட்டதாகவும், கிழக்கு நோக்கி படுத்திருப்பதாகவும், புராணக்கதை கூறுகிறது. கங்கை மட்டும் வெளிவந்த தாகவும் அதுவே இப்பகுதியில் 'நந்தி ஆறு' என ஓடுவதாகவும், புனிதமான தாகவும் கருதப்படுகிறது.

அரிய அதிகார நந்திதேவர்

கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் அழகிய விநாயகர், கல்லிலே வடிக்கப்பட்ட நடராஜர் – சிவகாமி அம்மை, சேத்ரபாலர் தெய்வ வடிவங்கள் சிறப்பாக வழிபடப் பெறுகின்றன. மேலும் அமர்ந்த கோலத்தில் மனித உடலுடன் நந்தி முகத்துடன் காட்சி தரும் அரிய அதிகார நந்தி தேவரின் சிற்பத்தினைக் காணலாம். இக்கோயிலில் நந்தியெம் பெருமானின் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளதைக் காண முடிகிறது.

கல்வெட்டுகள் – வரலாறு:

இக்கோயிலில் 40க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை அளிக்கும் செய்திகள் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. முதலாம் ராஜேந்திர சோழனுக்கும் – மேலை சாளுக்கிய மன்னனுக்கும் நடைபெற்ற போரில் யானைப் படையில் இருந்த ராஜமல்ல முத்தரையன் என்பவன் போரிட்டு இறந்தான். அவன் பெயரில் இக்கோயிலில் வழிபாட்டிற்காக ராஜேந்திர சோழன் தானமளித்திருக்கிறான் என்ற சிறப்பு செய்தியை கல்வெட்டு குறிப்பிடுகிறது. குலோத்துங்க சோழன் காலத்தில் இக்கோயிலில் சேத்ரபால தேவருக்கு வழிபாட்டிற்கு தானம் அளிக்கப்பட்டது. இன்றும் இக்கோயிலில் அத்திருமேனி சிறப்பாக வழிபடப் பெறுவதைக் காணலாம். இக்கோயிலில் ஒரு மண்டபம் **'உத்தம சோழன் மண்டபம்'** எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது. நாயன்மார்களின் வடிவங்களும் இக்கோயிலில் நிறுவப்பட்டு வழிபாடு செய்யப்பட்டதாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அச்சுததேவ மகாராயர் காலத்தில் இக்கோயிலில் தேர்த்திருவிழா நடைபெற தானம் அளிக்கப்பட்டதையும் அறிகிறோம். இவ்வூரில் உள்ள சிறு குன்றின் மீது உள்ள கோயில் குலோத்துங்க சோழீசுவரம் உடையார் கோயில் என அழைக்கப்படுகிறது. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் பிரம்மதரைய முத்தரையன் சகோதரர் வனவிச்சாதிர நாடாழ்வான் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டதையும் அறிய முடிகிறது.



ஊட்டத்தூர் சுத்தரத்தினேசுவரர் கோயில் வரலாற்றுச் சிறப்புடன், வழிபாட்டுச் சிறப்பும் கொண்டு விளங்குகிறது. உள்ளம் மகிழ ஊற்றத்தூர் பெருமானைப் போற்றி நலமடைவோம்! அழகு மிக்க திருக்கோயிலைக் கண்டு மகிழ்ந்து போற்றுவோம்!

# உலகம் உய்ய உதித்த உடையவர்

–சென்ற இதழ் தொடர்ச்சி



வடக்கு நோக்கி சென்ற இராமானுஜர் அப்பகுதியில் உள்ள மதவாதிகளை எல்லாம் வேத வாக்கியங்களால் வென்று பட்டிமண்டபத்தை அடைந்து எல்லா நாட்டவர்களும் வணங்குமாறு வீற்றிருக்கக் கூடிய வெள்ளத் தாமரைப் பூவில் இருக்கக் கூடிய சரஸ்வதி தேவியின் பக்கத்தில் சென்றார் இராமானுஜர். இராமானுஜர் தன் அருகில் வருவதைக் கண்ட சரஸ்வதி தேவியார் இராமானுஜரை வணங்கி அன்பரே, "என்னுடைய செல்வங்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வீராக," என்று சொல்லவும் முக்தரான இராமானுஜர் அன்னம் போன்ற மெல்லிய நடையை உடைய அம்மையே தாங்கள் என்னிடம் இவ்வாறு நடந்து கொள்ளக் காரணம் என்ன என்று கேட்டார்.

சரஸ்வதி தேவியாரும் இராமானுஜரைப் பார்த்து, "நன்மைமிக்க குணத்தை உடையவரே வேதத்தின் வாக்கியமான ''தஸ்யயதாகப்யாஸம்'' என்ற வாக்கியத்திற்கு ஸ்ரீபாஷியத்தில் தாமரைப்பூப் போன்ற ஒப்பற்ற கண்களை உடையவர் என்று பிழையின்றி சொன்னீர். எனவே, நான் உனக்கு அடிமையானேன் என்று சொன்னாள். இதைக் கேட்ட இராமானுஜர் விஷ்வாமித்திரர் ராம பிரானை புகழ்ந்த பொழுது சிறிதும் மகிழ்ச்சி இல்லாமல் சமநிலையில் ராம பிரான் இருந்து போல இராமானுஜரும் இருந்தார்.

"என்றவள் உரைப்ப எதிகள்நா
யகரும் இராகவன் கவுசி கன் புகழ
நின்றனன் என்ன நின்றனர் தம்மை
நெஞ்சினில் இறை வியப்(பு) இன்றி

**பெ.ராமநாத பிள்ளை, செயல் அலுவலர், ஆனைமலை, உடுமலை வட்டம்.**

அன்று போய் மற்றோர் தினத்தினில் புலவர் அடிதொழ
வாக்கிதன் னிடத்தில்
சென்றவள் கையில்சீ பாடியம்
தன்னை வைத்தனர் யாவரும்
தெளிய''.

– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–712.

பின்பு ஒரு நாள் இராமானுஜர் சரஸ்வதி தேவியிடம் வந்து எல்லோரும் கூடியிருக்கும் நிலையில் ஸ்ரீபாஷியம் எழுதப்பட்ட ஓலைச் சுவடியை சரஸ்வதியின் கையிலே வைத்து, கலைமகளே இந்த ஸ்ரீபாஷியம் உலகத்தை உய்விக்க வந்த நூலாக இருக்கும். அதனால், இதனை உமது கையிலே வைத்துக் கொண்டிருப்பீராக அவ்வாறு இல்லை என்றால் கீழே போட்டு விடுவீராக என்று சொல்லி "உத்தமமான நூலாகிய ஸ்ரீபாஷியத்தை சரஸ்வதியின் கையிலே வைத்துச் சென்றார்".

புலவர்கள் கொண்டாட தன் திருமடத்திற்கு எழுந்தருளினார். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மதவாதிகள் ஒன்று கூடி சரஸ்வதியும் இதனை தன் தலையிலே வைத்துக் கொண்டாடுவது உறுதி. அவ்வாறு நடந்து விட்டால் நமக்கு இங்கு மரியாதை இல்லாமல் போய்விடும். எனவே, நாம் அர்ச்சகர் உதவியுடன் சரஸ்வதியின் கையில் இருக்கும் ஸ்ரீபாஷியத்தை எடுத்து வந்து நெருப்பில் இட்டு அழித்துவிட வேண்டும் என்று சதித் திட்டம் தீட்டி அன்று இரவே அர்ச்சகர் வீட்டிற்கு சென்று சரஸ்வதியின் கையில் இருக்கும் ஸ்ரீபாஷியத்தை எடுத்துத் தந்தால் உனக்கு பெரும் செல்வம் தருவோம் என்று ஆசை வார்த்தை சொல்லி அந்த அர்ச்சகரையும் இந்த தீய செயலில் ஈடுபட வைத்தனர்.

அர்ச்சகரும் நள்ளிரவில் சரஸ்வதி கோயிலுக்குச் சென்று பார்க்கவும் சரஸ்வதிதேவியார் அந்த ஸ்ரீபாஷியத்தை தன் தலையிலே அணிந்து கொண்டு இரண்டு கண்களிலும் ஆனந்த கண்ணீர் பெருக்கெடுத்து ஓட நின்றாள். இதனைக் கண்ட அர்ச்சகர் மிகவும் நடுநடுங்கி நின்றார், இருப்பினும் அற்ப இன்பத்தைத் தரும் பொருளுக்காக சரஸ்வதியின் தலையில் இருந்த ஓலைச் சுவடியை எடுத்து தன் வீட்டிற்கு வந்தார். அவர் வரவுக்காக காத்திருந்த மதவாதிகளும் அந்த ஸ்ரீபாஷியத்தை வாங்கி நெருப்பில் போட்டனர்.

நெருப்பில் இட்டதும் அந்த நூல் எரியாமல் நெருப்புக் கடவுள் வாங்கிக் கொண்டார். சரஸ்வதி தேவியார் அந்த நெருப்புக் கடவுளிடம் சென்று அந்த ஓலைச் சுவடியை தருவாயாக என்று கேட்டார். பிரம்மாவின் மனைவியான சரஸ்வதியே வந்து கேட்டதால் அந்த ஓலைச்சுவடியை நெருப்புக் கடவுள் கொடுத்தார். கொடுத்து விட்டு, தாயே தாங்கள் இதைப் பெற்றுக் கொள்ள காரணம் என்ன என்று கேட்டார்.

சரஸ்வதி தேவியாரும் நெருப்புக் கடவுளை நோக்கி, "நெருப்புக் கடவுளே கேட்பாயாக என்று சொல்லி இந்த உலகத்திலே பெரும் துன்பங்களை எல்லாம் போக்குவதற்காக இராமனின் தம்பியான இலட்சுமணன் ஸ்ரீராமனுஜராக அவதரித்து இந்த பாஷியத்தை செய்தார், இந்த நூல் நான்கு வேதங்களையும், பிழிந்தெடுத்த நல்ல சாரம்சம் ஆகும். இராமானுஜரை எதிர்த்து வாதிட்டவர் எல்லோருமே தோற்றுப் போய்விட்டனர்.

இந்த மேலான நூலை இராமானுஜர் என் கையிலே கொடுத்துச் சென்றார். நானும் இந்த தெய்வீக நூலை தலையிலே வைத்துக் கொண்டாடி மிகவும் மனம் மகிழ்ந்து, மெய்மறந்து நின்றேன். சமயம் பார்த்து இந்த பாதகர்கள் என்னிடத்தில் இருந்து எடுத்து வந்து உன்னிடத்தில் இட்டார்கள். இதுதான் நடந்த காரணம் என்று நெருப்புக் கடவுளிடம் சரஸ்வதி தேவியார் எடுத்துக் கூறினார்.

''இந்த நூல் வேத நான்கையும்

வடித்தாங் கெடுத்தநல் சாரமா
தலினால்
அந்தமில் புகழாய் இவருடன்
எதிர்த்தார் அனைவரும் தோற்றனர்
விரைவில்
வந்தவர் இந்த மண்டலத் தவரை
வாதிடை வெல்லவென் றெண்ணிச்
சிந்தையில் மகிழ்ந்தார் என்கரத்
திந்தச் சீரிய நூலைவைத் தகன்றார்".

– ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல்–721.

சரஸ்வதிதேவியும் நெருப்புக் கடவுளிடம் இருந்து ஸ்ரீபாஷியத்தைப் பெற்றுக் கொண்டுகோயிலுக்குள் சென்று வீற்றிருந்தாள். மறுநாள் காலையில் துறவிகளுக்கு எல்லாம் தலைவராக இருக்கக்கூடிய இராமானுஜர் தன் அடியார்களை அழைத்து நாம் நேற்று சரஸ்வதியின் கையிலே கொடுத்த ஓலைச்சுவடிகளை கொண்டு வருவீர்களாக என்று கூறினார்.

அடியவர்களும் புறப்பட்டுச் சென்று சரஸ்வதி கோயிலை அடைந்து அர்ச்சகர்களைப் பார்த்து உயர்ந்த புகழை உடைய உடையவர் நேற்று சரஸ்வதியின் கையிலே ஸ்ரீபாஷிய ஓலைச் சுவடியை வைத்துச் சென்றார். இன்று அதை சரஸ்வதியின் கையில் இருந்து எடுத்துத் தருவீராக என்று கேட்கவும், அர்ச்சகர்கள் நிலை தடுமாறி நடுநடுங்கி பின்னர் சுதாரித்துக் கொண்டு ஞானத்தில் மிகுந்தோர்களே நேற்றைய நாளில் இச்சுவடி தேவியின் கையில் இருக்கக் கண்டோம். இன்று காலையில் சூரிய உதிப்பிற்கு முன்னே கோயிலுக்குள் சென்று சரஸ்வதியின் திருப்பாதங்களை விளக்குவதற்காக சென்றோம்.

சரஸ்வதியின் கையில் ஸ்ரீபாஷ்யம் இல்லாமல் வெறும் கையோடு இருந்தாள். சரஸ்வதி எங்கே ஒழித்து வைத்தாளோ எங்களுக்கு தெரியாது என்று கூறினார்கள். அர்ச்சகர்கள் சொன்ன பதிலைக் கேட்டு அடியார்கள் மனம் கலங்கி கோயில் முழுவதும் தேடினார்கள். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. எனவே, மிகுந்த சோகத்தோடு இச்செய்தியை இராமானுஜரிடம் சொல்வதற்காக வந்தார்கள். அவ்வாறு வரும் வழியில் அங்குள்ள அந்தணர்களில் சிலர் நேற்று ஓலைச் சுவடியை இராமானுஜர் சரஸ்வதி தேவியின் கையில் வைத்துச் சென்றார். ஆனால், வேற்று மதவாதிகள் அதை நெருப்பில் இட்டு அழித்து விட்டார்கள். ஊரெல்லாம் இதே பேச்சாக இருக்கிறது, உங்களுக்கு இதைப் பற்றி தெரியுமா என்று அடியவர்களிடம் கேட்கவும் உண்மையாகவும் இருக்கலாம் என்று சொல்லிக் கொண்டு நடந்த சம்பவங்களை எல்லாம் இராமானுஜரிடம் விவரமாக சொன்னார்கள். அதனைக் கேட்டதும் இராமானுஜர் எல்லையற்ற துன்பத்தில் மூழ்கினர். பக்கத்தில் இருந்த கூரத்தாழ்வார் இராமானுஜரிடம் "பரமாசார்யரே தேவரீர் கவலை கொள்ள வேண்டாம்," ஸ்ரீபாஷியம் முழுவதும் எனக்கு மனப்பாடமாக உள்ளது. நான்கே நாட்களில் எழுதித் தருகிறேன். கவலையை விடுங்கள்," என்று ஆறுதல் கூறினார். இதைக் கேட்ட இராமானுஜர் மிகவும் மனம் மகிழ்ந்து கூரத்தாழ்வாரை தழுவிக் கொண்டு என் உயிர் போன்றவரே நீர் என் பக்கத்தில் இருக்கும் பொழுது எனக்கு துன்பம் வருமா என்று சொல்லிக் கொண்டு தன் அடியவர்களை நோக்கி பிரம்மாவின் நாக்கிலே குடியிருக்கும் சரஸ்வதி ஸ்ரீபாஷியத்தை எவரிடமும் கொடுத்திருக்க மாட்டார். நீங்கள் திருக்கோயிலுக்குச் சென்று அர்ச்சகரை அழைத்துச் சென்று அம்பாளின் கூந்தலை அவிழ்த்து பார்க்கச் சொல்லுங்கள். "பாம்பணையிலே பள்ளி கொண்டிருக்கும் திருமாலே பரம்பொருள் என்று சொல்லும் இந்த ஸ்ரீபாஷியத்தின் பெருமையை கலைவாணி நன்கு உணர்வாள்,"

எனவே அவருடை தலையிலே தான் ஸ்ரீபாஷ்யம் இருக்கும் என்று சொல்லி அடியவர்களை திருக்கோயிலுக்கு அனுப்பி வைத்தார்.

"கொடுத்திடாள் எவர்க்கும் இன்றுநீர்
ஏகிக் கோதறும் வாக்குடையாளை

அடுத்து நின்(று) அணங்கின்
அர்ச்சகன்தனைக்கொண்டாங்கவள்
ஓங்கு பூங்குழலை
விடுத்துரை விரித்து நோக்குவித்
திடுமின் மெல்லியல் சிரத்தினில்
இருக்கும்
படுத்தபாம் பணையான் பரத்துவம்
என்னுஞ் சொல்
பனுவலுக் கினியவள் அறியும்''.
– ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல்–730.

உடையவரின் உத்தரவுப்படி அர்ச்சகரை அழைத்து கூந்தலை அவிழ்க்கச் சொன்னார்கள். அர்ச்சகரும் கூந்தலை அவிழ்த்துப் பார்த்தார் சரஸ்வதி தேவியின் கூந்தலிலே ஸ்ரீபாஷ்யம் இருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமும், அதிசயமும் அடைந்தார்கள். சரஸ்வதி தேவியார் தன் கூந்தலில் இருந்த ஸ்ரீபாஷியத்தை இராமானுஜரின் அடியவர்களிடத்தில் கொடுத்தார்.

தேவர்களே வந்தாலும், முனிவர்களே வந்தாலும், மும்மூர்த்திகளே வந்தாலும் ஏழு உலகங்களும் பொடியாகி அழிந்து போனாலும், தர்ம மார்க்கத்தில் இருந்து தவறாத இராமானுஜர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யம் அழியுமா, ஒருபோதும் அழியாது.

அதனை அன்னம் போன்ற நடையை உடைய சரஸ்வதி தேவியாரின் கரத்தில் இருந்து மதவாதிகளின் தூண்டுதலின் பேரில் அர்ச்சகர்கள் எடுத்துக் கொடுத்து மதவாதிகள் நெருப்பில் இட்டதை நெருப்புக் கடவுளிடம் இருந்து சரஸ்வதிதேவி மீண்டும் பெற்று, சத்தியமே வடிவமான இராமானுஜரிடம் கொடுத்தார் என்ற செய்தி உலகம் முழுவதும் பரவியது.

''அன்னமென் நடையாள்
திருக்கையில் இருந்த ஆசறு
கோசத்தை அவள் பால்
மன்னும் அர்ச் சகனார் எடுத்தவர்க்(கு)
அளிப்ப மறுசம யத்தவர் எரியில்.
நென்னலிட் டனர்கள் மற்றதை வாக்கி
நெடுமுடிமிசையில்வைத் திருந்து
நன்னலத்(து) எதிகள் தலைவருக்(கு)
அளித்தாள் என்பதை நானிலம்
முழுவதும்''.
ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–733.

இதனைக் கேட்ட அந்த நாட்டு மன்னன் இது ஆச்சரியமும், அதிசயமாகவும் இருக்கிறது. இராமானுஜருக்கு துன்பம் அளித்த மதவாதிகளை அழைத்து வாருங்கள் என தூதுவர்களை அனுப்ப தூதுவர்களும் அவர்களை அழைத்து அரசர் முன் நிறுத்தினார்கள்.

அவர்களைப் பார்த்து அரசர் ஏன் திருமால் அடியாருக்கு இத்தகைய துன்பத்தைச் செய்தீர்கள் என்று கேட்டார். பிற மதவாதிகளும் அரசனை நோக்கி அரசரே நீங்கள் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை தான் நாங்கள் இத்தகைய கொடுமைகளை செய்தோம். அவர் நடமாடும் தெய்வமே ஆவார்.

எனவே, எங்களை மன்னித்து விடுங்கள் என்று மன்னிப்புக் கேட்டார்கள்.

பின்னர் அரசரும், மதவாதிகளும் இராமானுஜரிடம் சென்று நாங்கள் எங்கள் தவறை நினைத்து வருந்துகிறோம். எங்களை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும் என வேண்டினார்கள்.

ஐம்புலன்களையும் வென்று, முக்குலங்களையும் கடந்த சத்தியமே, தர்மமே வடிவமான இராமானுஜர் அவர்களை மன்னித்து, அவர்களை வைஷ்ணவர்களாக்கி தமது பெயரிலே உயர்ந்ததொரு மண்டபம், கட்டி உலகப் பற்றை அறவே ஒழித்து வைஷ்ணவ அடியார்களை அங்கே தங்க வைத்து விட்டு பன்னிரண்டு மைல் தூரம் அரசனே வந்து வழி அனுப்பி வைக்க கிழக்கு திசை நோக்கி வந்தடைந்தார்.

– தொடரும்.

# ஸேனாபதிகள்



பெருமாள் கோயில்களில் விஷ்வக்சேனர் என்று ஒரு தெய்வம் உண்டு. விஷ்ணுவுக்கு எந்தெந்த அம்சங்கள் உண்டோ அவை எல்லாம் இவருக்கும் உண்டு. சங்கம், சக்கரம், கதை, அபய ஹஸ்தங்களுடன் அமர்ந்த நிலையில் காணப்படும். இவர் எல்லா திருமால் கோயில்களிலும் இருப்பார்.

இவருக்கு ஸேநாபதி, ஸேனை முதலி என்ற பெயர்கள் உண்டு. விஷ்ணுவின் அம்சமாக இவரை வணங்குகின்றோம். பெருமாள் கோயிலுக்குக் கொடுக்கப்படும் கொடைகள் எல்லாம் இவர் பெயராலேயே வழங்கப்படும். பெருமாள் கோயில்களுக்கு வாங்கப்படும் நிலங்கள், பிற சொத்துக்கள் எல்லாம் ஸோநாபதி பெருவிலை என்ற பெயரில் வாங்கப்பட்டன என்று கல்வெட்டுக்களில் காண்கிறோம். சுருங்கச் சொன்னால் சிவாலயங்களில் சண்டிகேச்வரர் எவ்வாறு விளங்குகிறாரோ அதேபோன்ற நிலைமை பெருமாள் கோயில்களில் வகிப்பவர் ஸேநாபதி என்னும் விஷ்வக்சேனர்.

சேய்ஞலூ பிள்ளையான ஸ்ரீ சண்டிகேச்வரரின் வரலாறு நமக்குத் தெரியும்.

"வெகுண்டெழுந்த தாதைதாள்
மழுவினால்" எறிந்த அம்மையான்
அடிச்சண்டிப்பெருமானுக்கு
அடியேன்"

என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவரது தீவிர பக்தியை மெச்சி அவருக்கு சிவபெருமான் சண்டீசபதம் அளித்தாக சைவ வரலாறு கூறும். இதை தமது திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

"அண்டர் பிரானும்
தொண்டர்தமக்கு
அதிபனாக்கி அனைத்துநாம்
உண்டகலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காக
சண்டீசனுமாம் பதம் தந்தோம்
என்றவர் பொற்றடமுடிக்கு
துண்டமதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்,"

உப மன்யு பக்த விலாசம் என்னும் சமஸ்கிருத நூலும் பெரிய புராணச் செய்யுளை அப்படியே மொழிபெயர்த்துத் தருகிறது.

ததோ தயாநிதி: தோர்ப்யாம்
ஆக்லிஷ்ய அங்கானி பாணினா
பராம்ருச்ய சிரஸ் தஸ்ய
பபந்த ஆத்மனஸ்ரஜம்
மஹ்யம் நிவேதிதம் யத்யத்

தத்தத் துப்யம் ததாமி அஹம்
வஸன அசன தாம்பூல
கந்தாதி இத்யுவாச தம்

என்ற செய்யுட்கள் சேக்கிழார் பெரிய புராணத்தின் நேர்மொழி பெயர்ப்பு.

இவ்விரண்டிலும் சண்டேச்வரர் சிவபெருமானின் சேனைத் தலைவர் என்ற கருத்து கூறப் பெறவில்லை. இருப்பினும் சிவாலயங்களில் சண்டேச்வரருக்கும் ஸேநாபதி என்ற பெயர் சோழர் காலத்தில் வழங்கியது என்று கல்வெட்டு மூலம் அறிகிறோம். தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம், திருவிசலூர் கிராமத்தில் உள்ள சிவயோகநாத சுவாமி கோயில் இருக்கிறது. இக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் தான் அப்பெயர் காணப்படுகிறது. அக்கல்வெட்டு வேறு யாருடைய கல்வெட்டும் அல்ல! சோழப் பேரரசன் முதலாம் ராஜராஜனுடையது தான். இராஜராஜனே இந்தக் கோயிலுக்கு வந்து இந்த தெய்வத்தின் முன்னே துலாபாரம் செய்தான். அப்பொழுது அவன் தேவி லோகமஹாதேவி இங்கு 'ஹிரண்யகர்ப்பம்' என்னும் யஞம் புரிந்து 458 பொற்காசுகள் இக்கோயிலுக்குக் கொடுத்தாள்.

இக்காசுகளை இவ்வூர் சபையினர் பெற்றுக் கொண்டு தினந்தோறும் அக்கார அடிசில் அமுது நைவேத்யம் செய்ய ஒப்புக் கொண்டனர்.

இதைக் குறிக்கும் "நாங்கள் இக்கோயிலில் இருந்து இந்தப் பணத்தை வட்டிக்கு பெற்றுக் கொண்டு, இவ்வமுது நாள்தொறும் செய்விக்கிறோம்," என்று சபையினர் எழுதிக் கொடுத்தனர். இதைக் கல்வெட்டில் "இத்திருவிசலூர் மகாதேவர் ஸேநாதிபதிகள் மூலபிருத்யரான சண்டேச்வரதேவர் பக்கல் மஹாசபையோம் கொண்டகாசு" என்று குறித்துள்ளனர். இதிலிருந்து சண்டிகேச்வரரை சேநாபதி என்று அழைக்கும் மரபு சோழர் காலத்தில் இருந்தது என்று அறிகிறோம். பெருமாள் கோயிலில் விஷ்வக்சேனர் சேநாபதி, சிவாலயத்தில் சண்டிகேச்வரர் சேநாபதி.

நன்றி: டாக்டர் இரா. நாகசாமி
(சொல்மாலை நூல்.)

## குமரகுருபரர்

திருநெல்வேலியிலிருந்து 18 மைல் தொலைவிலிருக்கும் ஊரே ஸ்ரீ வைகுண்டம். இவ்வூரின் வடக்கில் திருக்கயிலாயம் என்ற சிற்றூர் உள்ளது. இவ்வூரில் வாழ்ந்த சண்முகக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரிக்கும் ஆண்மகவொன்று பிறந்தது. ஐந்து வயது வரையிலும் வாய்பேசாத ஊமையாகவே வளர்ந்தது அக்குழந்தை.

திருச்செந்தில் ஆண்டவனை வணங்கி வழிபட்டுத் தம்குறையை முறையிட்டுக் கொண்ட பெற்றோர். குழந்தையுடன் கோயிலில் கண்ணயர்ந்திருந்த இரவில், குழந்தை காண திருமுருகன் தோன்றினார். ஊமைக் குழந்தையின் நாவில் தமது வேல்கொண்டு எழுதினார். குழந்தைக்கு "குருபரன்" என்ற நாமமும் சூட்டி மறைந்தருளினார்.

முருகன் திருவருளால் ஐந்து வயது அளவும் ஊமையாகவே வளர்ந்த அந்தக் குழந்தை, உடனே பேசியதோடு திருஞானசம்பந்தர் போல் பாடவும் செய்தது. கந்தர் கலிவெண்பா என்ற அந்த அற்புதமான நூலை ஐந்து வயதில் அருளிச் செய்த குழந்தைதான் குமரகுருபரர் என்று நம்மால் பெருமையுடன் அழைக்கப்படும் ஞானக்குழந்தையாகும்.

-சென்ற இதழ் தொடர்ச்சி

மனன கமலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர்
வவையிலன்
இனனுணர் முழுநலம் எதிர்நிகழ்
கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகுநரை
யிலனே

உயிருக்கு உயிர்

ஆத்மாவின் (உயிர்) தன்மை எப்படிப் பட்டது? மனத்தின் குற்றங்கள் எல்லாம் நீங்கி, தூய்மை பெற்று பின்பு மனத்தின் யோக ஞானத்தால் அறியப்படுவது ஆத்மா.

அப்படிப்பட்ட ஆத்மாவின் தன்மையை உடையவனோ இறைவன்? அல்ல.

உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் நம் இந்திரியங்களால் அறியப்படுகின்றன. அப்படி அறியப்படும் தன்மையுடைவனோ இறைவன்? அல்ல. எதிர்காலம், நிகழ்காலம், இறந்த காலம் ஆகிய எந்த காலத்திலும் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவனான இறைவன். ஞான மயமாகவும் ஆனந்த மயமாகவும் இருப்பவன் இத்தகைய இறைவன் என் உயிருக்கு உயிர் ஆவான்.

அவன் தன்மை

இறைவன் இதைவிட மேம்பட்டவன், இப்படிப்பட்டவன் அல்லன், இப்படிப்பட்ட பொருள் வேறு இல்லை என்று எல்லாம் சொல்லலாமே தவிர, அவன் இப்படிப்பட்டவன் என்று அறுதியிட்டு, அளவிட்டு கூற முடியாதவன்.

இறைவன், "இதைப் போன்றவன், அதைப் போன்றவன்," என்று உபமானத்தால் விளக்கி அறிய முடியாதவன்.

ஆனாலும், உபநிஷத்தும், உபமானத்தைக் கொண்டே பரப்பிரம்ம ஸ்வருபத்தை நிருபிக்கிறது!

ஆழ்வாரும்,

"கடிசேர் நாற்றத்துள்ளானை
இன்பத் துன்பக் கழி நேர்மை
ஒடியா இன்பப் பெருமையோன்
உணர்வில் உம்பர் ஒருவனே.
(திரு.8.8.2)

என்று உபமானம் மூலமாகத் தான் நிரூபிக்கிறார்.

அவனுக்கு உபமானம் உண்டோ?

உயர்வற உயர்நலம் உடைய இறைவனை உபமானம் சொல்லி விளக்குவது சரியோ? கூடாதுதான். ஆனாலும், சொல்கிறோம். சிற்றறிவுக்கு எட்டிய வரைச் சொல்லிக் கொஞ்சமாவது மனதில் பதிய வேண்டும் என்பதே



# கண்டேன் கமலமலர்ப் பாதம்

நோக்கம்.

"எம்பெருமானை உபமானத்தால் புகழவும் வேணும்; உடனே ஐயோ! சாதாரண வஸ்துவுடன் ஒப்பிட்டு சொல்லி விட்டோமே'' என்று வருந்தவும் வேணும்," என்கிறார் காஞ்சி சுவாமி.

''எவனிடத்தில் இருந்து இந்தப் பொருள்கள் எல்லாம் உண்டாகின்றனவோ, எவனால் உண்டானவை பிழைக்கின்றனவோ, அழிவினை அடைந்து பிரளயத்தில் எவனை அடைகின்றனவோ, அவனை அறிவாய்; அவனே பரம்பொருள்'' (தைத்ரிய உபநிஷத்)

இறைவன் தன் குணங்களைக் காட்டி ஆழ்வாரை வசீகரித்தான். அந்தக் குணங்கள் ஓர் உருவத்தைப் பற்றித்தான் இருக்க முடியும் என்பதால் பற்றுக் கோட்டிற்கு உருவினை "அவன்" என்று அருளிச் செய்தார் முன் பாசுரத்தில்.

<u>அவன் வேறுபட்டவன்</u>

அந்த இறைவன் உயிர்ப்பொருள், உயிரில்லாப் பொருள் ஆகியவற்றிற்கு முற்றிலும் வேறுபட்டவன் என்று அவனை அனுபவிக்கிறார். மனத்தில் உண்டாகும் அறிவின்மை முதலிய குற்றங்கள் நீங்க என்ன செய்ய வேண்டும்?

உயிர்கள் அழிவற்றவை;

ஞானமும் அழிவற்றது.

ஞானம் தோன்றுவதும், மறைவதும், ஞானம் பரவுவதற்கு வழியாக உள்ள மனமே.

<u>மனத்தால் அவனை அறிய முடியுமோ?</u>

அந்த மனத்தில் ஞானத்திற்குத் தடையான குற்றங்களை எப்படிப் போக்குவது?

யோக நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் இயமம், நியமம் முதலிய முறைகளைக் கையாண்டு, வெளிப் பொருள்களில் ஈடுபட்ட மனத்தை உட்பொருளை நோக்கச் செய்யல் வேண்டும்.

யோக நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளல் சிரமம் எனத் தயங்குகிறோம். நம் முன்னோர்களும், இப்போது வாழும் பெரியோர்களும் கடைப்பிடிக்க வேண்டிய தருமங்களைச் சொன்னார்கள்; சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். செவி கொடுப்போம்; மனம் தூய்மை பெறும். மனம் என்பது 'அசித்' தத்துவத்தில் 24வது; உயிர் என்பது 'சித்' 25வது தத்துவம்; எம்பெருமான் என்கிற ஈச்வரன் 26வது, மன அறிவினால் அறியப்படுவது உயிர்; ஆனால், இறைவனின் தன்மையை மன அறிவினாலும் அறிய முடியாது. அணு அளவுடைய ஆத்மாவை அறிவது போன்று, எங்கும் பரந்து இருக்கிற இறைவனை அறிய முடியாது.

அப்படியானால், 'மிக்கத் தூய்மை உடைய மனத்தால் அறியப்படுகிறான் இறைவன்' என்ற வேத வாக்யம் தவறனாதோ?

வேத வாக்யம் சத்தியமானது என்பதைத் தூய்மையான ஆழ்வார் "கண்டேன் கமல மலர்ப்பாதம்,'' என்றும், 'அவா அறச் சூழ்ந்தாயே' என்றும் அருளி இருப்பதால், சாதாரண மக்களுக்குப் புலப்படாத அவன் ஆழ்வார் போன்றோர்களுக்குக் காட்சி அளித்தான் என்பது தெரிகிறது.

<u>அவனே எல்லாம்</u>

இறைவனை நேருக்கு நேர் அறிய முடியாவிட்டாலும் ஓரளவு உபமானம் மூலம் விளக்கியுள்ளனர்.

'உப்புக் கட்டியானது உள்ளும் புறமும் உப்புச் சுவையாகவே இருப்பது போன்று, இறைவனுடைய திருமேனியும் உள்ளும், புறமும் ஞானமயமாகவே இருக்கும்' (ப்ரஹா உபநிஷத்) ''ஆனந்தமே இறைவன்'' 'ஆனந்தமயமானவன்' (தைத்ரிய உபநிஷத்)

**அவன் முக்காலத்திலும் ஒப்பில்லா தவன்**

**எல்லா உயிர்களும் இறைவனுக்குச் சரீரம்**

**எல்லா உயிர்களுக்கும் அவனே தாரகன்.**

இறைவனாகிய தான் உயிர்களைச்

சரீரமாகக் கொண்டு தாரகமாய் எல்லோரையும் .ஏவுகின்றவனாய் இருப்பது போன்று, தன்னையும் ஏவக் கூடிய வேறு ஒரு பொருள் உண்டோ? என்றால், அவனுக்கு மேம்பட்டவர் யாரும் எதுவும் இல்லை.

"இறைவனுக்கு ஒப்பாரும், மேம்பட்டாரும் இல்லை. (ஸ்வேதஸ்வதா உபநிஷத்).

இலனது உடையனிது என
நினைவரியவன்
நிலனிடைவிசும்பிடை
உருவினனருவினன்
புலனொடு புலனலன் ஓழிவிலன்
பரந்த அந்
நலனுடைய யொருவனை நணுகினம்
நாமே.

<u>அவன் உடமைகள் எவை?</u>

இறைவன் அதனைத் தனக்கு உடைமையாக இல்லாதவன்; இதனை உடையவன் என்ற இரு தன்மையாலும் நினைக்க முடியாதவன்.

காணப்படுகின்ற இந்த உலகத்தையும், காண முடியாத தேவ லோகத்தையும், மற்ற அனைத்துலகங்களையும் அவைகளிலுள்ள எல்லா உயிருள்ளவற்றையும், உயிரற்ற பொருள்களையும் உடையவன்; அவன் அந்த எல்லாப் பொருள்களிலும் தானாகவே இருப்பவன்.

இப்படி எல்லா பொருள்களையும் விட்டு நீங்காமல் எங்கும் பரந்திருக்கின்ற அந்நற் குணங்களையுடைய ஒப்பற்ற பகவானிடம் நாம் சேர்ந்தோம்.

நாம் வாழும் இந்த உலகத்தை லீலா விபூதி என்கிறோம். இதைப் போன்ற பல உலகங்கள் உள்ளன. (இந்த எல்லா உலகங்களும், இறை வனின் விளையாட்டிற்குரிய உலகங்கள்)

இறைவன் நிரந்தரமாக நித்யசூரிகள், முக்தாத்மாக்கள் சூழ எழுந்தருளியிருக்கும் இடம் பரமபதம் – ஸ்ரீவைகுண்டம் (நித்யவிபூதி).

உலகத்திற்குத் தலைவன்' என்பதை 'நிலனிடை விசும்பினிடை உருவினன் அருவினன்' என்கிறார்.

உயிருக்குள் உயிர்

இப்படி எல்லாவற்றையுமுடையவனாய் இருக்கும் இறைவன் நித்ய கைங்கர்ய இன்பத்தில் கருத்து ஊன்றி பரம்பதத்திலே தங்கிவிடுவானோ? அல்ல. இந்த உலகங் களில் உள்ளவை பட்டவற்றைத் தானும் பட்டு, உடன் கேடனாய் (தானும் கூடக் கெட்டுக் கிடப்பவனாய்) இருந்து கொண்டு நோக்குகிறான். அதாவது, எல்லாப் பொருள்களையும் உண்டாக்கி அவைகளின் உயிர் வழியே பிரவேசித்துப் பின்னர் இந்தப் பொருள்களை உருவகங்களையும், பெயர்களையும் பெறும்படி செய்து, அவை ஒவ்வொன்றிலும் உட்புகுந்து, நியாமகனாய், எல்லோர்க்கும் உயிர்க்கு உயிராக நிற்பவன்.

அப்படியானால் அவன் சரீரத்தினுடைய வளர்தல் தேய்தல் முதலிய நிலை மாறுபாடோ, உயிர்களின் இன்ப துன்பங் களோ அவனுடன் பொருந்தி, அவனைப் பாதிக்கும்படி இருக்கிறானோ?

அல்ல. தான் ஒட்டு அற்று, எந்தவித பாதிப்புமற்று விளங்குகின்றான்.

அதாவது, அந்தந்த பொருள்களின் தன்மை வேறுபாடுகளும், இன்ப துன்பங்களும் தன்னைத் தீண்டாவண்ணம் இருப்பான்.

<u>அந்த இருவர்</u>

"பரமாத்மா, ஜீவாத்மா என்ற இருவர், சிறந்த ஞானரூபகமான சிறகுகள் உடையவர்களாய், ஒத்த குணங்களையுடையவர்களாய், உடையவன், உடைமை என்ற உறவை உடையவர்களாய், சரீரம் என்ற ஒரே மரத்தினைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அவைகளுள் ஜீவாத்மா, நல்வினை, தீவினை ஆகிய இருவினைப் பயன்களை நுகர்ந்து கொண்டிருக்கின்றான். மற்றவன் பரமாத்மா, அந்தப் பயனை நுகராமல் அமைதியாக இருக்கின்றான்." (ருக்வேதம்)

மேலிரண்டு பாசுரங்களாலும் அருளிச் செய்த குணங்களோடு கூடிய இறைவனை நினைந்து அவனைத் தொழுது எழுவோம்.

**முனைவர். டி.எஸ். ராமஸ்வாமி.**

# தீபப்பிரகாசர்

க்ருதயுகத்தில் நான்முகன் திருமாலைக் காணும் ஆசையில் அசுவமேதயாகம் செய்ய சத்யவ்ரத க்ஷேத்திரமான காஞ்சியைத் தேர்ந்து எடுத்தார். யாகத்தைக் கெடுக்க அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக ஆக்கினார்கள். எம்பெருமான் ஒரு பேரொளியாகத் தோன்றி இருட்டைப் போக்கினார். அதனால் அவருக்குத் தீபப்ரகாசர் என்றும் விளக்கொளி பெருமாள் என்றும் பெயர் ஏற்பட்டது. இது நடந்த தலம் திருத்தண்கா எனப்படும்.

பிரம்மாவிடம் கோபம் கொண்ட சரஸ்வதி, வேகவதி என்கிற ஆறாகப் பெருக்கெடுத்து யாகம் நடத்தும் இடத்திற்குப் பாய்ந்து வந்தபடி இருந்தாள். இதைக் கண்ணுற்ற பெருமாள் வேகவதி வரும் மார்க்கத்தில் வந்து சயனித்தார். சரஸ்வதி வெட்கம் அடைந்து திரும்பிவிட யாகம் இனிது முடிந்தது. அவசரத்தில் பெருமாள் வலமிருந்து இடமாக சயனித்தார். வேகவதிக்கு அணையாக வந்த இடமாததால் வேகவணை, வேகவணை, வெஃகணை என்று பலவாறாக மருவி திருவெஃகா ஆகியது. திருமழிசை ஆழ்வாரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டதால் பெருமாளுக்குச் "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்" என்ற காரணப்பெயர் ஏற்பட்டதாகவும் அப்போது அவசரத்தில் மாறி சயனித்தாகவும் கூறுவது உண்டு. அக்னியிலிருந்து எழுந்த தேவப் பெரு மாளின் முகத்தில் தீப்புண்களின் வடுக்களை இன்றைக்கும் நாம் காண முடிகிறது.

த்ரேதாயுகத்தில் கஜேந்திரன் ஆராதித்ததால் அத்திகிரி என்ற பெயர் ஏற்பட்டது. (ஹஸ்தி) அத்தி=யானை; கிரி=மலை.

த்வாபர யுகத்தில் பிரஹஸ்பதியும், கலியுகத்தில் ஆதிசேஷனும் ஆராதித்ததாக புராணங்கள் சொல்லுகின்றன.

நகரங்களில் சிறந்தது காஞ்சி என்பதை நகரேஷு காஞ்சி என்பார்கள். மோட்சம் தரும் ஏழு நகரங்களில் காஞ்சியும் ஒன்று என்ற பெருமை பெற்றது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த காஞ்சியின் அருள்பாலிக்கும் தெய்வங்களான தேவராஜன், பெருந்தேவித் தாயாருக்கு நடத்தும் நவராத்திரி உத்ஸவத்தையும் அதன் சிறப்புகளையும் பார்ப்போம்.

சிவபெருமானுக்கு ஒரு ராத்திரி என்றால் தேவிகளுக்கு ஒன்பது ராத்திரி என்கிற வகையில் நவராத்திரி உத்ஸவங்கள் கொண்டாடப்படுகின்றன. அந்த அந்த ஆலயத்து பெண் தெய்வங்களை கொலு மண்டபத்தில் இருத்தி ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு அலங்காரம் வீதம் செய்வித்து பூஜை செய்வது மரபு.

மாறாக காஞ்சியிலே பெருமாளும் தாயாருடன் இருந்து கொலுவை அலங்கரித்து சேவை கொடுப்பது காஞ்சிக்கே உள்ள மற்றொரு சிறப்பு என்றும் சொல்லலாம் அல்லவா?

புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசை அன்று வரதராஜப்பெருமாள் தன் உபய நாச்சிமார்களான ஸ்ரீதேவி, பூதேவியுடன் மலையிலிருந்து கீழே இறங்கிவந்து கண்ணாடிஅறை உள்ள மண்டபத்தில் தங்குவார். உத்ஸவம் முடிந்து தசமி அன்று அம்புபோடும் திருவிழா முடிந்தபின்தான் மலைக்குத் திரும்புவார்.

பெருந்தேவித் தாயாரும் கீழே இறங்கிவந்து அந்த ஒன்பது நாட்களும் கண்ணாடி அறையிலேயே தங்குவார். தினமும் காலையில் விசுவரூபதரிசனம் எல்லாருக்கும் கிடைக்கும்.

தினமும் கண்ணாடி அறைக்கு வெளியே உள்ள மண்டபத்தில் நடைபெறும் திருமஞ்சன சேவையை பக்தர்கள் மண்டபத்திற்கு வெளியே நின்று கொண்டு தரிசிக்கலாம், பின் தீர்த்தப்ரசாதம், தாயாரின் விரதத்தின் அடையாளமாக மஞ்சள், மாவுப்ர சாதங்களும் வினியோகம் ஆகும்.

சரியாக மாலை 5.30 மணிக்கு இரட்டைப் புறப்பாடு ஆகும். தாயாரை ஒரு தோளுக்கு இனியானிலும், பெருமாள் உபயநாச்சிமார் களை மற்றொரு தோளுக்கினியானிலும் சேர்ந்து சேவை சாதிப்பதை இரட்டைப் புறப்பாடு என்பார்கள்.

சர்வாலங்கார பூஷிதையாக தாயாரும், பெருமாளும் விதம்விதமான ஆபரணங்களை அணிந்தவாறும், தினம் தினம் ஒவ்வொரு பின்னல் அலங்காரத்தில் தாயாரும், விதவித கொண்டை அலங்காரத்தில் பெருமாளும் காட்சி தருவார்கள். புஷ்பஜோடனையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இருவரும் கண்ணாடி அறையிலிருந்து வெளியே வந்தவுடன் முதலில் உள்ள தாததேசிகள் சன்னதியில் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு பிரதியாக சாமரத்துடன் சடாரி அனுக்ரஹம் செய்துவிட்டு நகருவார் கள்.

பத்து தப்படிக்கு ஒரு தரம் தெய்வங்களுக்கு கர்ப்பூர ஆரத்தியும் நைவேத்யமும் செய்யப்படும்

நாதஸ்வர வித்வான்களின் அதி அற்புத நாத இசையில் மக்கள் திளைத்துக் கொண்டிருப்பார்கள்.

தாயாரும் பெருமாளும் முதலில் ஒரு குடை, இரண்டு குடை, மூன்று குடை என்று 3 குடைகள் நிழலில் வருபவர்கள் நூற்றுக்கால் மண்டபம் அருகே வந்து மூன்றும் ஒவ்வொன்றாக விலகிக் கொண்டு, தங்ககுடைகளின் நடுவே அவர்களை ஊஞ்சலில் அமர்த்திவிடுவார்கள். நாதஸ்வர லாலி இசையில் திளைத்தபடி சிரம பரிகாரம் செய்து கொள்வார்கள்,

ஊஞ்சலை ஆட்டியவாறே அவர்களுக்கு தீர்த்த உபசாரம், நைவேத்தியம் கண்டருளச் செய்து விட்டு, ஒரு புத்துணியை இரண்டு பாகமாக கிழித்து ஒரு பாகத்தைச் சுருட்டி பெருமாளுக்கு திருஷ்டி சுத்தி ஒரு பக்கத்தில் எறிவதை ஒருவர் பிடித்துக் கொண்டு அடிவழியாக மறு பக்கத்திற்கு வந்து அங்கு எறியப்படும் மற்ற பகுதியை பிடித்துக் கொண்டு செல்வார்.

பின் அவர்களை நூற்றுக்கால் மண்டபத்தில் எழுந்தருளச்செய்து சுமார் 3 மணி நேரம் பக்தர்களுக்கு அருமை யான தரிசனத்தைத் தந்ததுடன் பிரசாத வினியோகமும் எல்லாருக்கும் கிடைக்கும்.

இரவு 9 மணிக்கு அதே தோரணை யுடன் தெய்வங்கள் கண்ணாடி அறைக்குள் சென்று இளைப்பாறு வார்கள்.

காலை விஸ்வரூபத்திலிருந்து திருமஞ்சனம், புறப்பாடு, சயனம் என்கிற ஒவ்வொரு நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போதும் வேட்டுப் போடுவார்கள்.

எந்த எந்த நிகழ்ச்சி என்பது பற்றிய விபரங்கள் வேட்டுச் சப்தம் கேட்டவுடனேயே காஞ்சிபுரவாசிகளுக்கு அத்துபடியாகும். அதனால் உடனே தயார்ஆகி ஆண்கள் பஞ்சகச்சத்திலும் பெண்கள் 9கெஜ மடிசார் புடவையிலும் ஆலயத்தை நோக்கி கூட்டம் கூட்டமாகச் சென்று அங்கு குழுமியிருந்து பெருமாளை சேவிக்கும் காட்சிபோல வேறு எந்த ஊரிலும் இத்தகைய கட்டுப் பாடான காட்சியைக் காண முடியாது.

இவ்வாறு நவராத்திரி உத்ஸவம், அம்புபோடும் நிகழ்ச்சி கோலாகலமாக நடந்து முடிந்தபின் தெய்வங்கள் அவரவர்கள் சன்னிதிக்குத் திரும்புவார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பெருந்தேவித் தாயார் மாலையில் புறப்பாடு கண்டு துரைமண்டபத்திற்குச் சென்று சற்று இளைப்பாறுவார், அங்கும் எல்லாருக்கும் தீர்த்த, சடாரி, ப்ரசாதம் கிடைக்கும்.

அதே போல் வரதனும் ஏகாதசி, அமாவாசை, ஸ்வாதி போன்ற நாட்களில் மலையிலிருந்து கீழே இறங்கி வந்து கண்ணாடி அறையில் தங்கி திரு மஞ்சனம் கண்டருளுவார். மாலையில் எதிரில் இருக்கும் (சன்னிதி தெருவில்) சிறிய திருவடி ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வருவார். எதேச்சையாக இந்த திதிகள் வெள்ளிக் கிழமைகளில் வந்துவிட்டால் இரட்டைப் புறப்பாடு ஆகும். மக்களுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் சேவிக்க ஓடி வருவார்கள்,

இவைகளை அசைபோட்டபடியே இருக்கும்போது தீபாவளித் திருநாள் வந்துவிடும், தீபாவளி அன்று இரவு பெருமாள் வீதி உலா கிளம்பி மாட வீதி வலம் வருவார்.

அவரை ஒவ்வொரு முக்கிய இடத்திலும் இருக்க வைத்துவிட்டு வெடிகளை வெடிப்பார்கள் பாருங்கள், வெடிச்சப்தம் காதுகளை உறைய வைத்துவிடும்.

தோரணவெடி, நட்சத்திரவெடி, சரவெடி, ஆகாயத்தில் பாய்ந்து பின் நட்சத்திரங்களாகவும் தோரணங் களாகவும் வண்ண வண்ணங்களாக மாறும் வெடிகள், கவசம் என்று அசத்திவிடுவார்கள். வெடித்த பட்டாசுகள் சாலை முழுக்க பாய் விரித்ததுபோல பரவிக் காணப்படும்.

பெரு மகிழ்ச்சியுடன் வெடிகள் வெடிப்பதைப் பார்த்து ரசித்தபடி பெருமாள் மிகுந்த உற்சாகத்துடன் காட்சி தருவார்.

நவராத்திரி உத்ஸவத்தின் அழகையும் தீபாவளியின் போது நடக்கும் வெடிச் சப்தத்தையும் காண வேண்டுமானால் இப்போதிலிருந்தே திட்டம் போடுங்கள், அடுத்த வருடம் காஞ்சிக்கு உல்லாசப் பயணமாக வருவதற்கு.

இடவசதி, நீர்வசதி, சாப்பாடு ஆகியவைகளுக்கு காஞ்சியில் பஞ்சமே கிடையாது.

ஆயிரம் நா படைத்த ஆதிசேஷனால் கூட உத்ஸவ வர்ணனையைப் பூராவும் சொல்ல இயலாது என்று கூடச் சொல்லலாம். நேரில் கண்டுதான் களிக்க வேண்டும்.

அதற்கு கோடி கண்கள் இருந்தாலும் போதாது என்று சொல்லி முடிக்கிறேன்,

வாருங்கள், வந்து வரதனின் அருளைப் பெற்று மகிழுங்கள்.

இந்திரா ஆராவமுதன்
ஸ்ரீரங்கம்

## அரிதாவது எது?

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒரு சிங்கமுதுகின்மேல்
கொள்ளலாம்!
கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலில் இரதம்வைத் தைந்துலோ
கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்
துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்
மற்றொரு
சரீரத்தி லும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம், கனல்மேல்
இருக்கலாம்
தன்நிகரில் முத்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது.

– தாயுமானவர்

# மிளகைப் பயிறாக்கிய திருப்பயத்தங்குடி நாதர்!

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பூம்புகாரும், நாகப்பட்டினமும் புகழ் பெற்ற துறைமுகங்களாக விளங்கின. இவற்றின் மூலம் அரபு நாட்டில் இருந்து பாய்மரக் கப்பல்களில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அதற்கு ஈடாக மிளகு மூட்டைகள் அக்கப்பல்களில் ஏற்றப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டன. இம்மிளகு

மூட்டைகள் சேர நாட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, சாலை வழியாகக் கொண்டு வரப்பட்டன. இதனால் அரசு தன் வருவாயைப் பெருக்க இம்மிளகு மூட்டை ஏற்றுமதிக்கு அதிக அளவில் சுங்க வரி விதித்தது.

இந்நிலையில், சிவனடியாரான வணிகர் ஒருவர் மிளகு மூட்டைகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு திருப்பயத்தங்குடி வழியாக வந்து கொண்டிருந்தார்.

அவ்வூரின் எல்லையில் சுங்கச்சாவடி இருப்பதை அறிந்தார். இந்தச் சுங்கச்சாவடியில் அரசின் ஆணைப்படி, மிளகு மூட்டைகளுக்கு அதிக வரியும், மற்றப் பொருட்களுக்கு வரிச் சலுகையும் தரப்பட்டன.

புதிதாக வணிகம் தொடங்கிய சிவனடியார், தனது மிளகு மூட்டைக்கு அதிக வரி செலுத்தினால் தனக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்பதை அறிந்து பயம் கொண்டார். சிறந்த சிவ



பக்தரான அவர், திருப்பயத்தங்குடியில் சிவாலயம் அமைந்துள்ளதைக் கேள்வியுற்று மனம் மகிழ்ந்தார். தன்னை நாடிய அடியாருக்காக நரியைப் பரி(குதிரை)யாக்கிய இறைவனின் திருவிளையாடல் அவருக்கு நினைவுக்கு வந்தது. அதனால் நாமும் முயற்சிக்கலாம் என்ற நம்பிக்கையில் அவ்வாலயம் சென்றார். இறைவனிடம் மனமுருகி வேண்டுகோள் விடுத்தார்.

“இறைவனே! சுங்க வரி செலுத்தினால் எனக்குப் பேரிழப்பு ஏற்படும். தங்கள் கருணையினால் இந்த மிளகு மூட்டைகளைப் பயிறு மூட்டைகளாக மாற்றி, சுங்கச் சாவடி கடந்த பின் மீண்டும் மிளகு மூட்டைகளாக மாற்றித் தர வேண்டும்,'' என வேண்டுகோள் விடுத்தார். அதன்பின், அன்றிரவு தன் வண்டியுடன் அந்த ஆலயத்திலேயே தங்கி விட்டார். அவர் கனவில் வந்த இறைவன், அவர் கோரிக்கையை ஏற்பதாகப் பதில் கூறினார்.



மனம் மகிழ்ந்த வணிகர், மறுநாள் காலையில் தனது மூட்டைகளைச் சோதித்துப் பார்த்தபோது, அவை அனைத்தும் பயிறு மூட்டைகளாக மாறியிருந்தன. சுங்கச் சாவடியில் சுங்கவரி விதிக்காமல், வண்டி கடந்து சென்றது.

துறைமுகம் சென்றதும், பயறு மூட்டைகள் மீண்டும் மிளகு மூட்டைகளாக மாறின. வணிகர் மிளகு விற்ற செல்வத்தின் பெரும் பகுதியை இறைவனுக்கே தொண்டு செய்து இறையருள் பெற்றார். அவரது வணிகமும் பல மடங்கு பெருகியது.

சிவனடியார்க்கு மனமிரங்கிய இறைவன், மிளகைப் பயறாக மாற்றியதால், திருப் பயற்றூர் என இத்தலம் போற்றப்படுகிறது. திருப்பயற்றூரே இன்று திருப்பயத்தங்குடி என வழங்கப்படுகிறது.

### ஆலய அமைப்பு:

திருக்கோயில் கிழக்கு நோக்கி எளிய வகையில் அமைந்துள்ளது. வாயிலின் இருபுறமும் சுவர்களின் மீது நந்தி வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. தென்புற வாயில் ஒன்றும் இவ்வாலயத்தில் இடம் பெற்றுள்ளன. ஆலயத்தின் தெற்கிலும் மேற்கிலும் நந்தவனம் அமைந்துள்ளது.

கிழக்கு வாயில் வழியாகச் சென்றால் பலிபீடமும் நந்தியும்

காணப்படுகின்றன. இவ்வாலயத்தில் தட்சிணாமூர்த்தியின் முன்பாக சிலந்தி மரம், தல விருட்சமாக அமைந்துள்ளது. தட்சிணாமூர்த்தியின் இருபுறமும் இரு முனிவர் வடிவங்களும் அவர்களுக்கு மேலே இரு பெண்கள் வடிவங்களும் அமைந்துள்ளன. கிழக்கே தண்டாயுதபாணி சுவாமி சந்நிதி அமைந்துள்ளது.

மேற்குச் சுற்றில், கிழக்கு நோக்கிய சித்தி விநாயகர் கோயிலும், அதன் இடப்புறம் முருகன் வள்ளி தெய்வயானை சந்நிதியும் அமைந்துள்ளன.

அதன் அருகே மற்றொரு சந்நிதியில் முருகன் வள்ளி தெய்வயானை யுடன் காட்சி தருகின்றார். வடக்கே விசாலாட்சி உடனுறை விசுவநாதர் அருள் வழங்குகின்றார். மகாலட்சுமி, கஜலட்சுமி திருவுருவங்கள், வீரமாகாளி சந்நிதி ஆகியவையும் அமைந் துள்ளன. வடசுற்றில் தண்டாயுதபாணி, பைரவர், சூரியன் சன்னதிகள் அமைந் துள்ளன. தென் கோடியில் சோமாஸ்கந்தர், மகா கணபதி ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

இவ்வாலயத்தில், முருகனுக்கு நிறைய திருவுருவங்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முருகன் அடியார்கள் இவ்வூரில் நிறைந்திருந்ததையும் இவ்வூரில் முருகப் பெருமானுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டதையும், முருகனுக்கு விழாக்கள் எடுக்கப்பட்டிருப்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

முன்மண்டபத்தில் அம்பிகை சன்னதி அமைந்துள்ளது. மகா மண்டபம், அர்த்த மண்டபத்தைக் கடந்து இறைவன் கருவறை காணப்படுகிறது. மூலவர் திருப்பயற்றுநாதர் கிழக்கு முகமாகக் காட்சி தருகின்றார்.

### காவியங்கண்ணி

காவி என்பது ஒரு வகைப் நீர்ப்பூ. அம்பிகையின் கண்கள் காவி மலர்களை ஒத்திருப்பதால், அன்னை காவியங்கண்ணி என்று அழைக்கப்படுகின்றாள். பிரம்ம தீர்த்தத்தில் குளித்து அம்பிகையை வழிபட்டால் கண் நோய் நீங்கும் என்பது ஐதீகம். அம்பிகை நான்கு கரங்களுடன் இடது கை தொடையின் மீதும், மற்றொரு இடது கை தாமரை மலரைத் தாங்கியும், வலது கரங்களில் அபய முத்திரையும், மற்றொன்றில் ருத்திராட்ச மாலையும் கொண்டு காட்சி அளிக்கிறாள். அம்பிகையின் செவிகளில் குழைகள் அழகுடன் அமைந்துள்ளன.

"…. காவியங்கண்களாகி கடல்
வண்ணமாகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார்
திருப்பயற் றூரனாரே"



என்கிறார் திருநாவுக்கரசர்.

இதே போல,

**"மயற்றூர் பறித்த மனத்துள்**

**விளைந்த**

**பயற்றூர் திசை எம்மானே,"**

என இத்தலத்தை வள்ளலார் புகழ்ந்துரைத்துள்ளார்.

**தலம் – தீர்த்தம்**

இவ்வாலயத்தின் இடதுபுறமாக திருக்குளம் அமைந்துள்ளது. இதற்குக் கருணா தீர்த்தம் என்று பெயர். இறைவனும் இறைவியும் கருணை வெள்ளமாகத் திகழ்வதை இது குறிப்பிடுகிறது.

இவ்வாலயத்தின் தலவிருட்சமாக சிலந்தி மரம் அமைந்துள்ளது. மஞ்சள் நிறமும் சிலந்தி வடிவமும் கொண்டு மலர்கள் இதில் பூத்துக் குலுங்குகின்றன.

**கல்வெட்டு**

இவ்வாலயத்தின் கருவறை மேற்சுவரில் அமைந்துள்ள கல்வெட்டின் மூலம் பஞ்சநாதவாணன் என்பவனுடைய கண் நோய் தீர திருச்சிற்றம்பலமுடையானுக்கு சொந்தமாக அரை மா நிலம் வழங்கப் பட்டுள்ளதை அறிய முடிகிறது. இதன் மூலம் இந்த இறைவன் கண் நோய் தீர்க்கும் தெய்வமாகத் திகழ்ந்ததை அறிய முடிகிறது.

**அமைவிடம்**

நாகை மாவட்டம் நாகை வட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் இவ்வூர் அமைந்துள்ளது.

விளப்பாறு என்னும் ஆற்றின் வடதுறையில் திருப்பயத்தங்குடி அமைந்துள்ளது.

இவ்வூரைச் சுற்றி திருவிற் குடி, திருச்செங்காட்டான்குடி, திருக்கண்ண புரம், திருமருகல், திருப்புகலூர் ஆகிய புகழ் பெற்ற தலங்கள் அமைந்துள்ளன.

திருவாரூர் – திருமருகல் பேருந்து வழித் தடத்தில் வடகிழக்கே 12 கி.மீ., தொலைவில் திருப்பயத்தங்குடி அமைந்துள்ளது. திருவாரூரில் இருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒரு பேருந்து (பேருந்து எண். 14) இவ்வூர் வழியே திருமருகலுக்குச் செல்கிறது. இவ்வழித் தடத்தில் செல்வோர் திருப்பயத்தங்குடி நிறுத்தத்தில் இறங்கி இவ்வாலயத்திற்கு எளிதில் செல்லலாம்.

**தரிசன நேரம்**

இத்தலத்திருக்கோயில் காலை 8 மணி முதல் 12 வரையிலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் திறந்திருக்கும்.

**விழாக்கள்**

இத்திருக்கோயிலில் வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடி வெள்ளி, நவராத்திரி, கார்த்திகை சோமவாரம், மார்கழி ஆருத்ரா, தை வெள்ளி, சிவராத்திரி மற்றும் பிரதோஷம் முதலானவை கொண்டாடப்படுகின்றன. இத்தலம் வியாபார வளர்ச்சிக்கு உகந்த தலமாக விளங்குவதால், வணிகர் களுக்கு ஏற்றம் தரும் தலமாகத் திகழ்கின்றது.

**கட்டுரை–படங்கள்: பனையபுரம் அதியமான்.**


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழநாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேநதிரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86
தொலைபேசி: 23450920/28117575


ISKCON Bangalore
Sreenivasa Vimanam
Mar 2009
குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள்,
கொடிமரம்,பிரபை, பத்தரை மாத்து தங்கத்தில்
பளப்பளக்க செய்வோம்
Thejus
24-Ct Gold Platings
94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370. 94440 00060 email: divyasid@gmail.com www.thejus.com

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

# ஸ்ரீரங்கம்
# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்
## வைகுண்ட ஏகாதசி மகோத்ஸவ அழைப்பிதழ்



108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம், பெரிய கோவில் என்று அழைக்கப்படுகிற ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து உற்சவங்களுமே சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

பிரதி வருஷமும் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருஅத்யயன உற்சவம் (வைகுண்ட ஏகாதசி, திருமொழி, திருவாய் மொழித் திருநாட்கள்) முக்கியத் திருவிழா ஆகும்.

பகல் பத்து, இராப்பத்து 'இயற்பா' என்று 21 நாட்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் பகல்பத்தின் போது நம்பெருமாள் அர்ச்சுன மண்டபத்திலும், இராப்பத்து திருநாளில் திருமாமணி மண்டபத்திலும் (ஆயிரங்கால் மண்டபம்), எல்லா ஆழ்வார்கள், ஆச்சாரியர்களுடன் எழுந்தருளிச் சேவை சாதிப்பது மிகவும் சிறப்பாகும்.

பகல் பத்தின் போது திருமொழிப் பாசுரங்களும், இராப்பத்தில் திருவாய்மொழிப் பாசுரங்களும் அபிநயங்களுடன் அரையர்களால் சேவிக்கப்படும், பகல் பத்து திருநாளில், பத்தாம் நாள் நம்பெருமாள் மோகினி அலங்காரத்துடனும், வைகுண்ட ஏகாதசி அன்று நம்பெருமாள் ரத்ன அங்கியுடனும், மூலவர் முத்தங்கியுடனும் சேவை சாதிப்பார்கள்.

வைகுண்ட ஏகாதசியன்று காலை நம்பெருமாள் பரமபத வாசல் வழியே வந்து திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளுவார். இராப்பத்து எட்டாம் திருநாளில், நம்பெருமாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வேடுபறி கண்டருளுவார். இராப்பத்துச் சாற்று முறையன்று நடைபெறும் நம்மாழ்வார் மோட்சம் சேவிப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த உற்சவம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கும், ஆழ்வார்களுக்கும் ஏற்றமிகு உற்சவமாகித் திருமங்கையாழ்வார் காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்திற்கு அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து நம்பெருமாளைச் சேவித்து அருள் பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

### வைகுண்ட ஏகாதசி முக்கிய திருவிழாக்கள்:

| | |
|---|---|
| **17.12.2009** | **திருநெடுந்தாண்டகம்.** |
| **18.12.2009** | **பகல் பத்து முதல் திருநாள்** |
| **27.12.2009** | **மோகினி அலங்காரம்.** |
| **28.12.2009** | **வைகுண்ட ஏகாதசி<br>பரமபதவாசல் திறப்பு<br>அதிகாலை 4.45 மணி.** |
| **3.1.2010** | **திருக்கைத்தல சேவை.** |
| **4.1.2010** | **வேடுபறி** |
| **7.1.2010** | **நம்மாழ்வார் மோட்சம்.** |

இவண்

திரு. பெ.கி.தியாகராஜன்
அறங்காவலர்குழுத்தலைவர்
திருமதி. வ. அமுதா
திரு. ரா. ஸ்ரீனிவாசன்
திரு. த. சேகர்
அறங்காவலர்கள்

மு.க. பாலசுப்பிரமணியன்
இணை ஆணையர் /
செயல் அலுவலர்(கூ.பொ.)